
சிவஞானபோகம்

## என்னுரை

சிவஞானபோதம் சிவனது திருக்கரத்தில் உள்ள நூல் என்று சைவசித்தாந்த நூல்களிளெல்லாம் சிறப்பித்துக் கூறுகின்றன. சிவன் நந்திக்குச் சிவஞானபோதத்தின் செய்யுள்களைக் கூறி அதன் உரையையும் கூறியதாகவும், அதன் பின் நந்தி அதைத் தனது சீடர்களுக்கு உபதேசித்ததாகவும் வரலாறு கூறுகிறது. நந்தி தேவரின் சீடனான மெய்கண்டருக்கு அதை உபதேசித்து மக்கள் உய்யும் பொருட்டு அதைத் தமிழில் நூலாக்குமாறு கூறியதாகவும் சைவசித்தாந்தம் கூறுகிறது.

இது பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் இதைச் சிவபெருமான் தான் ஆக்கி உபதேசித்தார் என்பதை யாரும் மறுக்கவில்லை

சைவசித்தாந்தத் தத்துவங்களை யாரும் எளிதில் விளங்கிக் கொள்ள முடியாது.விளங்கியவர்கள் பேசுவதையோ .எழுதுவதையோ மக்களால் விளங்கிக் கொள்ள முடியாத தத்துவமாகவே இன்றும் இருக்கிறது.விளங்கிக் கொள்ள முடியாத ஆயிரக் கணக்கான தத்துவங்களுக்கு நடைமுறை வாழ்வில் உள்ள சம்பவங்களைக் கதைகளாக்கி விளங்க வைத்தேன்.அதுபோல சிவஞானபோதத்தையும் விளங்க வைக்க முயற்சித்துள்ளேன். இதற்கான கதைகளைத் திருவருட்பயன் கதைகள் எனும் நூலில் கண்டு கொள்ளலாம்.

சிவஞானபோதத்திற்குப் பல முனிவர்கள் ,பேரறிஞர்கள், சித்தர்கள் உரை கூறியும் ,எழுதியும் உள்ளனர். அந்த வகையில் சிறியேன் ஆகிய நான் உரை

எழுதியுள்ளேன். இதை விமர்சிப்பது பெரியோரின் கடமை. எனது ஆக்கங்களை பல்லாயிரக் கணக்கானோர் இணையத்தில் வாசிக்கிறார்கள். அதனால் அவர்கள் எனது எழுத்துக்களை விரும்புகிறார்கள் என்று விளங்கிக் கொள்ள முடிகிறது.அதனால் தான் இந்நூலை இணையத்தில் சேர்த்துள்ளேன். வாசித்து விட்டு உங்கள் மனநிலையைக் கூறுங்கள்.

இந்நூலைக் கணணி மயப்படுத்தி தந்த திருமதி. தபஷ்வினி சந்திரகாந்தன் அவர்களுக்கு நன்றி

கே.வி.குணசேகரம்

கோப்பாய் மத்தி,

கோப்பாய்

# மதிப்பீட்டுரை

மகா சங்கார முடிவின் பின் உலகத்தை மீண்டும் படைத்தற் பொருட்டு பரமாத்மாவாகிய சிவன் நாத வடிவாயும், அதன் பின் விந்து வடிவாயும், அதன் பின் அக்கர வடிவாயும் தோன்றினார். பின் பரமசிவன் சதாசிவ மூர்த்தியாக நின்று தனது நான்கு திருமுகங்களில் இருந்து வேதங்களைத் தோற்றுவித்தார். பின் அதைப் பிரமனுக்கு உபதேசித்தார். இந்த வகையில் ஈசான முகத்தில் இருந்து சிவாகமங்களைத் தோற்றுவித்து அவற்றைப் பிரணவர் முதலிய பதினெண்மருக்கும் மகாருத்திரர் முதலிய பதினெண்மாருக்கும் அருளிச் செய்தார். அதன் பின் இருபத்தெட்டு ஆகமங்களையும் அனந்ததேவருக்கு உபதேசித்தார். அதை அனந்ததேவன் சீகண்ட உருத்திரருக்கு உபதேசித்தார். அதைச் சீகண்ட ருத்திரர் கணங்களுக்கும், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் உபதேசிக்கும்படி கூறி நந்திதேவருக்கு உபதேசித்தார்.

நந்திதேவர் அதைக் கேட்டு மகிழ்ந்து , தனது சிறந்த மாணவரான சனத்குமார முனிவருக்கு அருள, அவர் பூவுலகம் வந்து மெய்கண்ட தேவருக்கு உபதேசித்து, “இந்தச் சிவஞானபோதத்தை உலகோர் உய்யும் வண்ணம் தமிழில் உபதேசிப்பாயாக? என்று கூறினார். அதன்படி மெய்கண்ட தேவர் சிவஞானபோதத்தை உலகோர்க்கு உபதேசிக்கும் வண்ணம் தமிழில் ஆக்கினார் என்பது வரலாறு. அப்படியான வரலாற்றைக் கொண்ட சிவஞானபோதத்திற்குப் பல ஞானிகளும், ரிஷிகளும் ,மகான்களும் உரை எழுதினர். பெரும்பாலான உரை சாதாரண மக்களுக்கு விளங்குவதில்லை. வேதங்கள், உபநிடதங்கள், சைவசித்தாந்த தத்துவங்கள், பகவத்கீதை, திருவருட்பயன் போன்ற கடினமான நூல்களுக்கெல்லாம் கதைகளை எழுதிப் பாமர மக்களும் விளங்கிக் கொள்ள வழியமைத்தவர் குணசேகரம். அந்த வகையில் மிகவும் கடினமான சிவஞானபோதத்திற்கு உரை எழுதியுள்ளார். உரை இலகுவான தமிழில்

உள்ளது. இலகுவான மொழியைத் தேர்ந்தெடுத்து ஆவலைத் தூண்டும் வகையில் தத்துவங்களைக் கதைகளாக்கும் குணசேகரம் சிவஞானபோதத்திலும் அந்த முறையைக் கையாண்டிருக்கிறார்.

சிவஞானபோதம் சைவசமயத்தின் மூல நூல்.இதற்கு முன் சைவத்தின் இன்னொரு மூல நூலான திருவருட்பயன் என்ற நூலில் உள்ள நூறு பாடல்களுக்கும் கதையெழுதியவர். அதில் உள்ள தத்துவங்கள் அனைத்துக்கும் கதைகள் பொருத்தமானவை என்று திருவாவடுதுறை ஆதினம் கூறியுள்ளது.

இதற்காகக் கதைகள் எழுதப்படவில்லை. ஆனால் இதற்குத் திருவருட்பயன் கதைகள் பொருந்தும் என்று ஆசிரியர் கூறியுள்ளார். சைவ சித்தாந்தத் தத்துவங்கள் முழுவதற்கும் கதைகள் எழுதியமையால் அக்கதைகளை வாசித்து விட்டுச் சிவஞானபோகத்தை வாசிப்பது நல்லது. தமிழறிஞர் கே.வி.குணசேகரம் அவர்கள் சமயம், சமூகம்,தமிழ் என்பவற்றிற்கு அளப்பரிய சேவை செய்து வருகிறார்.நாயன்மார்களும் ,முனிவர்களும், புலவர்களும் பாடிய செய்யுள்கள் பலவற்றைக் கதைகளாக்கி வாசகர்களுக்குக் கொடுத்தால் அவை புத்துயிர் பெற்றுள்ளன. அருமையான செய்யுள்கள் பலவும் புதிய வடிவம் பெற்றமையால் அதை அறியாதிருந்த மக்கள் இப்போது ஆவலுடன் படிக்கின்றனர். தமிழ்ப்புலவர்களின் திறமைகளை இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின் திரு.குணசேகரம் வெளிப்படுத்தியுள்ளமை ஓர் இலக்கியப் புரட்சியாகும். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந் தொண்டாற்ற வேண்டும் என்று சிவனைப் பிரார்த்திக்கிறேன்.

பொ.பத்மநாதன்
ஓய்வு பெற்ற அதிபர்
யா/நாமகள் வித்தியாலயம்,கொக்குவில்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## நூற் சிறப்பு

**வேதம் பசுவதன்பால் மெய்யாகம் நால்வ**

**ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய் -போதமிரு**

**நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் -மெய்கண்டான்**

**செய்த தமிழ் நூலின் நிறம்.**

## விநாயகர் துதி

**மெய்கண்ட தேவன் தந்த மெய்ஞ்ஞானத் தீந்தேனை**

**யான் பாடி பார் மகிழ்ந்து ஈடேற**

**உளங்குரத்தால் அருள் புரிவாய்**

**நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியே**

நாவலர் ஸ்ரீ வித்தியாலய மகா கணபதியே,மெய்கண்ட தேவ நாயனார் அருளிச் செய்த சைவ சித்தாந்த மெய்ஞ்ஞானத் தீந்தேனான சிவஞானபேதத்தின் பொருளை உலகோரின் நன்மை கருதி நான் எழுத ,வழமையாக உனது அங்குசத்தால் அருளுவதைப் போல இப்போதும் அருள் செய்.

பன்னிரண்டு சூத்திரங்களுடைய இந்நூல் நாற்பது அடிகளைக் கொண்டது. இந் நாற்பது அடிகளில் இருநூற்றுப் பதினாறு சொற்கள் உள்ளன. இச் சொற்களுள் அறுநூற்று இருபத்து நான்கு எழுத்துக்கள் உள்ளன. மறைமலை அடிகளும் பல சைவ சித்தாந்த அறிஞர்களும் சிவஞானபோதம் சிவனால் அருளைப் பெற்ற முழுமையான தமிழ் நூல் என்ற அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

சிவஞானபோதத்திற்கு முதன் முதலாக உரை எழுதிய பாண்டிப் பெருமாளும் அவருக்குப் பின் உரை எழுதிய சிவஞான முனிவரும், அதன் பின் வந்த உரைகாரர்கள் சிலரும் வடமொழி நூலான இரௌரவ ஆகமத்தின் இறுதியில் இருக்கும் பாச விமோசனப் படலத்திலுள்ள பன்னிரண்டு சூத்திர வடிவிலுள்ள வடமொழிச் சிவஞானபோதத்தை மெய்கண்ட தேவர் தமிழிற் பாடினார் என்று கூறுகின்றனர்.

யார் எதைக் கூறிய போதும் சிவஞானபோதம் சைவ சமயக் கடவுளான சிவபெருமானைப் பற்றியும் ,அவரது அருட் செயல்களைப் பற்றியும் மிகவும் விரிவாகக் கூறும் சைவ சித்தாந்த ஞான முழு முதல் நூல் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு சைவனும் பூசித்துப் போற்றி முடிந்த முடிவான அத்துவித முத்தியைப் பெற வேண்டும் என்பதே சிவஞானபோதத்தின் சாரமாகும்.

சிவஞானபோதம் சைவ சித்தாந்தக் கொள்கையை விரிவாகக் கூறுவதோடு, அவைதீக சமயங்களின் தத்துவங்களை மறுத்துரைத்துச் சைவ சித்தாந்தத்தின் கருத்துக்களை வலியுறுத்தி நிரூபிக்கிறது.

<u>கடவுள் வணக்கம் உரை</u>

**கல்லால் நிழன்மலை**

**வில்லார் அருளிய**

**பொல்லார் இணைமலர்**

**நல்லார் புனைவரே**

திருக்கைலாய மலையில் உள்ள கல்லால விருட்சத்தின் கீழ் அமர்ந்திருந்து, சிவஞானபோதம் என்ற சைவ சித்தாந்த நூல் வாயிலாச் சிவாகமப் பொருட்கள் பற்றி வினாவிய திருநந்தி தேவருக்கு உருவாகிய சந்தேகங்களை தீர்த்தருளிய முதலாசிரியராக சீகண்ட தேவர் மேன்மேலும் கருணை கொள்ளும் பொருட்டு ,பொல்லாப் பிள்ளையாரின் ஞானா சக்தி,கிரியா சக்தி என்னும் இரண்டு திருவடிகளாகிய தாமரைகளையும் மெய்யன்பர்கள் தமது சிவசின்னங்கள சூடுவர்.

சிவஞான போதம் மீமாஞ்சகர்களின் சமயக் கொள்கைகளையும், உலோகாயுதர்களது சமயக் கொள்கைகளையும், பௌத்த சமயக் கொள்கைகளையும் ,சாங்கியரது சமயக் கொள்கைகளையும், பாஞ்ச ராத்திரிகளது சமயக் கொள்கைகளையும் ,அநேகேசுரவாதிகள் கொள்கைகளையும், சிவ சமயவாதிகளின் கொள்கைகளையும் ,ஏகான்மவாதிகளின்

கொள்கைகளையும், விசிட்டாத்வைதிகளின் கொள்கைகளையும் மறுத்துச் சைவ சித்தாந்தக் கொள்கைகளை நியாயப்படுத்தி ,பதில் பொருளாகிய சிவபெருமான் ஒருவரே உள்ளார் என்று நிலை நிறுத்துகிறது.

பிரபஞ்சம் நித்தப் பொருள் .அது முத்தொழில்களை உடையதல்ல என்பது மீமாசகரின் கொள்கை.

காட்சி, அனுமானம், உரை என்னும் பிரமாணங்கள் மூன்றில் காட்சிப் பிரமாணம் மட்டுமே பஞ்சேந்திரியங்களால் நேரே அனுபவித்து அறியக் கூடியது.அதனால் அதுவே நிட்சயமானது. மற்றவை இரண்டும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவையல்ல என்பது உலகாயுதர்களது கொள்கை.

பிரபஞ்சம் இல் பொருளானது அது தத்தஞ் சார்பிலே தோன்றி அழியும் என்பது பௌத்தர்களது கொள்கை.

பிரபஞ்சம் உள்பொருளாகையால் அதைப் படைக்கக் கர்த்தா தேவையில்லை என்பது சாங்கியரது கொள்கை.

ஸ்திதி கர்த்தாவாகிய நாராயணனே முழுமுதற் கடவுள் என்பது பஞ்சராத்திரிகளது கொள்கை.

அதிவிசித்திரமாகிய பிரபஞ்சத்தை ஒருவனால் படைக்க முடியாது. அதற்கு பிரமா முதலிய பலர் வேண்டும் என்பது அநேகசுரவாதிகளின் கொள்கை.

ஆன்மாக்கள் மலங்கள் நீங்கிய பின் பஞ்ச கிருத்தியஞ் செய்வர் (ஐந்தொழில்) என்பது சிவசமய வாதிகளின் கொள்கை.

இது தவிர வேதங்களையும் உபநிடதங்களையும் ஏற்று அதற்கு விளக்கமளித்த சங்கரர், ‘‘பிரமம் ஒன்றே சத், சித் ,ஆனந்தமாய் நித்தமாய் வியாபகமாயுள்ளது. மற்றவையெல்லாம் வெறுந் தோற்றங்கள்.ஆகையால் கடவுள், ஆன்மா ,பிரபஞ்சம் என்பன வெவ்வேறான பொருட்கள் அல்ல’’ என்று கூறுகின்றன.

கடவுள் ஒருவர் இருக்கிறார் ,அவர் எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்,அணு ரூபமுள்ள ஆன்மாக்களும்,அழிவற்ற சடப்பொருட்களும் அவரின் பகுதிகளாகும்.சிலந்தி தனது உடலில் உள்ள பொருட்களைக் கொண்டு வலையை உண்டாக்குவது போல இறைவன் தன்னுள் அடங்கிய சடப் பொருட்களைக் கொண்டு உலகைப் படைக்கிறான். அப்பொழுது அணுரூபமாக உள்ள ஆன்மாக்கள் தமது கர்மங்களுக்கேற்ப உடலைப் பெறும். இது விசிட்டாத்வைதிகளின் கொள்கை.

சைவ சித்தாந்தம் தமிழ் நாட்டில் உருவானது.அது உருவாகிய போது புறச் சமயங்கள் பல செல்வாக்குப் பெற்றிருந்தன. அரசரும் புறச் சமயங்களைப் பின்பற்றினர். இதனால் சைவ சமயக் கொள்கையை நிலை நாட்ட எழுந்தவை தான் மெய்கண்ட சாஸ்திர நூல்கள். இவை புறச் சமயக் கொள்கைகளை மறுத்துச் சைவ சித்தாந்தக் கொள்கைகளை நிலை நிறுத்துகின்றன.

இந்த வகையில் சிவஞானபோதம் பெரும் முக்கியத்துவம் வகிக்கின்றது.காணப்படுகின்ற இவ் உலகினைக் கொண்டு காணப்படாத கடவுள் ஒருவர் இருக்கிறாரென்றும், அவர் தான் படைத்தல், காத்தல்,அழித்தல் என்னும் முத்தொழில்களைப் புரிகிறாரென்றும் சிவஞானபோதம் எடுத்துச் சொல்கிறது.

இம் முத்தொழில்களையும் சிவபெருமான் உயிர்களது இன்பத்திற்காகவே நிகழ்த்துகிறாரென்றும் ,உடலின் வேறாக உயிர் என்றொரு பொருள் உண்டு .அவ்வுயிர் தானும் ஒன்றாகாமல் பலவாய்ப் பல்வேறு தன்மைகள் வாய்ந்தனவாய் தம் முதல் அழியாமல் இருக்கும் அவ்வுயிர்களைத் தொன்று தொட்டே ஆணவம் என்ற இருள் மலம் பற்றியுள்ளது.இந்த இருள் மலம் உயிர்களின் அறிவை மறைத்திருக்கிறது.இவ் இருளை நீக்குவதற்காக உயிர்கள் இறைவனாற் படைத்துக் கொடுக்கப்பட்ட உடல்களைக் கருவியாகக் கொண்டு செயற்பட்டு மல இருளை நீக்க வேண்டும் என்றும் சிவஞானபோதம் கூறுகின்றது.

உயிர் உள்ள பொருள், உயிர் இல்லாத பொருள் என்றும் இருவகையான பொருட்கள் உள்ளதே உலகம்.உயிருள்ள பொருளான ஆன்மாவைப் பற்றிய உண்மையான நிலை பற்றிக் கூறப்படுகிறது.உயிரில்லாத பொருட்களாகிய ஐம்பெரும் பூதங்களையும், ஐம்பெரும் பூதங்களினாலான தனு,கரண ,புவன போகங்களைப் பற்றியும் கூறுகிறது.

உலகத்தைப் படைத்தவர் முதலாவது கடவுள். அவ்வுலகைக் காப்பவர் இரண்டாவது கடவுள். அவற்றைச் சங்காரஞ் செய்யும் கடவுள் மூன்றாவது

கடவுள். அதனால் சங்காரஞ் செய்யும் மூன்றாவது கடவுளால் உலகைப் படைக்க முடியாது.அழிப்பவன் அதை ஆக்க மாட்டான்.அதனால் முதற் கடவுளான சதாசிவ தாண்டவேசுரப் பெருமானான சிவபெருமானே உலகைப் படைத்தவர்.

உயிரின் உதவியின்றி ஐம்பொறிகள் இயங்காதது போல இறைபக்தியின்றி அறியாமையாகிய இருள் நீங்காது. மனிதர் தமது சிற்றறிவினால் அறிந்து கொள்பவை யாவும், அசத்து என்றும்,மனப் பொறிகளுக்கு எட்டாதவற்றை இறைவனருளால் அறிந்து கொள்வது சத்து அதாவது ‘‘சிவசத்து’’ என்றும், சத்தாகிய சிவசத்தின் எதிரே அசத்தாகிய பொருட்கள் விளங்காது. அதற்காகச் சிவன் அவற்றுள் நிறைந்து நின்று அவற்றைத் தன்னில் வேறாகக் காணாத தன்மையை உண்டாக்கும். அசத்தாகிய பொருட்களுக்கு உணர்வுகள் இல்லாததால் அவை தாமாகச் சிவத்தைக் காண மாட்டாது.சத்தையும் அசத்தையும் கண்டு தனது விருப்பிற்கேற்ப ஆன்மாக்கள் இரண்டுடனும் சேரும் தன்மையின. இதனால் ஆன்மாவைச் சதசத்து என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

கடவுள், உயிர், மலம், மாயை ,வினை, வீடுபேறு பற்றிய முழுமையான தகவல்களையும் உயிர்கள் தமது கர்ம வினைகளுக்கேற்பப் பிறவி எடுப்பது பற்றியும் அதற்குக் காரணமாக இருக்கும் ஆணவ மலம் பற்றியும் வேறெந்த நூலும் கூறாத தகவல்களைச் சிவஞானபோதம் கூறுகிறது.

அத் தனு கரண புவன போகங்களைக் கொண்டு சுக துக்கங்களையும் சுவர்க்க நரகங்களையும் மாறி

மாறி இடைவிடாது அனுபவித்து வரும் உலகம், உயிருள்ள பொருள் என்று கூறப்படும் சேதன உலகமாகும். சேதனம் அறிவுடையது. அசேதனம் அறிவில்லாதது.காணப்படாத உலகம் சேதன உலகம். காணப்படும் உலகம் அசேதன உலகம். உயிருள்ள பொருட்களான சேதனப் பொருட்கள், உயிரில்லாத பொருட்களான அசேதனப் பொருட்களுடன் கலந்து வேற்றுமையில்லாது ஒன்றாகக் கலந்து காணப்படுவதால் சேதன உலகம் தனித்துக் காணப்படுவதில்லை.

தேகம் தான் ஆன்மா, இந்திரியங்கள் தான் ஆன்மா, அந்தக் கரணங்கள் தான் ஆன்மா, சூக்கும தேகம் தான் ஆன்மா, பிராணவாயுவே ஆன்மா, இந்திரியங்களும், அந்தக் கரணங்களும் ,சூக்கும தேகமும் ,சேர்ந்தது தான் ஆன்மாவல்ல பிரமம் சித்துப் பொருள், அதனால் பிரம்மமே ஆன்மா, இவையெல்லாம் ஆன்மாவல்ல, பிரமமும் இந்திரியங்களும், அந்தக் கரணங்களும், சேர்ந்த சமுதாயமே ஆன்மா. இவ்வாறு ஒவ்வொரு சமயத்தினரும் ஆன்மாவுக்கு வரைவிலக்கணம் கூறியுள்ளனர்.

இவை யாவும் ஆன்மாவுக்குரிய உண்மையான வரைவிலக்கணம் அல்ல. இவற்றிற்கெல்லாம் வேறாய் இவற்றையெல்லாம் அறியும் இயல்புடையதே ஆன்மா என்றும், மாயைத் தன்மையுடைய உடம்பினுள் கூட இருந்து அதற்கு வேறாக அவ்வப்போது நடைபெறும் செயல்களுக்கேற்ப உடலைச் செயற்படுத்தி அவைகளால் உண்டாகும் பயன்களை அனுபவிக்க உடலை வழிப்படுத்தும் அறிவு தான் ஆன்மா என்று சிவஞானபோதம் கூறுகிறது.

மனம், புத்தி, சித்தம்,அகங்காரம் என்றும் அந்தக் கரணங்களுள் ஒன்றல்ல ஆன்மா.அகாராதி சூக்கும பஞ்சாக்கரத்துக்குள்ளே அகார முதலிய நான்கினாற் குறிக்கப்படுவன அகங்காரம் முதலிய அந்தக் கரணங்கள் நான்கு. இறுதியாக உள்ள நாதத்தால் குறிக்கப்படுவதே ஆன்மா. அகார முதலிய ஐந்தும் பிரமன் முதலிய ஐவராலும் நிகழ்த்தப்படுவன. கணந் தோறும் நினைப்பாகிய சகலமும், மறப்பாகிய கேவலமும், காற்றாடி போல மாறி மாறி நிகழும். சகலாவத்தையின் கண்ணே கணம் தோறும் அறிவு தோன்றியும் ஒடுங்கியும் வருவது.கடலிலே புதிது புதிதாக அலை தோன்றியும் ஒருங்கியும் வருவது போன்றது என்று சிவஞான போதம் கூறுகிறது.

செம்பிற் களிம்பு போல ஆன்மாவுடன் மலம் அநாதியிலிருந்து சேர்ந்திருக்கிறது. மலத்தினால் மறைக்கப்பட்ட ஆன்மாவின் ஞான இச்சா கிரியைகளை வித்தை அராகம் கலை என்பன தீபத்தையும் உப நேந்திரத்தையும் நிகர்த்து விளக்கும். சகச மலம் ஆணவம் என்றும், ஆகந்துக மலம் மாயா காரியமாகிய உடம்பு முதலியனவென்றும், ஆன்மாவானது கேவலாவத்தை, சுத்தாவத்தைகளிற் சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம் ,துரியாதீபம் என ஐவகை அவத்தைகளை உடையது என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

ஐம்புலன்களையும் ஆன்மாவே இயக்குகின்ற போதும்,ஐம்புலன்களால் ஆன்மாவை அறிந்து கொள்ள முடியாது. சிவபெருமானினாலே ஆன்மாவானது சகலாவத்தையில் நின்று வினைப் பயன்களை அணுபவிக்கும். எனினும் தான் அனுபவிக்கும் தன்மையையும் , அங்ஙனம் அனுபவிக்கப் பண்ணும்

திரோதான சக்தியையும் ஆன்மா அறியாது. அரசன் ஒரு கருமம் செய்யும் போது தனது அமைச்சருடன் சேர்ந்து செய்வது போல ஆன்மா செயலாற்றும் போது இந்திரியங்களுடன் ஒன்றித்தே செயற்படும்.ஆன்மா சிவத்தை அடைய முயற்சிக்கும். சிவம் எதையும் அடைய அவாவோ முயற்சியோ கொள்ளாது. அவரது சந்நிதியின் கண்ணே அசத்தாகிய பொறிகள் எவையும் தோன்றாது. அதனால் சிவன் பொறிகளின் உதவியால் எதையும் அறிபவரல்ல, அனுபவிப்பவரும் அல்ல, ஆன்மாக்கள் சிவபெருமானுக்கு வேறாக நின்று அறியாமலும் ஒன்றாய் நின்று அறியாமலும், பொதுவாய் அவரோடு நின்று அறியும் என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

சிவபெருமான் இரக்கமெனப்படும் அருட் சக்தியிலிருந்து பிரியாதுள்ளவர். தனது அருட் சக்தியை ஆன்மாக்களுக்கு உணர்த்துபவர். அப்படி உணர்த்தும் போது விகாரமடையாதவர் என்றும் அவர் நிர்விகாரியாய் நிற்பவர். சிவபெருமான் எல்லாவற்றையும் ஆன்மாக்களுக்கு உணர்த்தும் உபகாரத் தன்மை உள்ளவர். அவ்வுபகாரத்தால் தான் ஆன்மா எந்த விடயங்களையும் உணர்ந்து கொள்கிறது. இவ்வாறு சிவபெருமான் உணர்த்த ஆன்மா விடயங்களை அறிந்து கொள்ளப் பொறி புலன் கரணம் என்பன துணை செய்கின்றன. இவ்வாறு உணர்த்த உணரும் தன்மையுள்ள ஆன்மாவுக்குச் சிவன் உணர்த்தும் உபகாரத்தைச் செய்ய ஆன்மா அறிந்து கொள்ளுமேயன்றி நேராகப் பொறி புலன் கரணங்கள் உணர்த்த அறிந்து கொள்வதில்லை. உதாரணம் மூலம் சொல்வதானால், ஒரு பொருளைக் காண்பதற்குக் கண் இன்றியமையாதது, இருப்பினும்

இருளான போது கண் எந்தப் பொருளையும் இனம் காண மாட்டாது. வெளிச்சத்தின் மூலமே கண் பொருளை உரியவாறு கண்டு கொள்ளும் .வெளிச்சம் பொருள் இன்னதென்று கண்ணுக்கு அறிவிக்கும். கண் ஆன்மா பொருளை அறிவதற்கு துணையாய் இருக்கும். அதுபோலச் சிவனருள் இல்லாவிட்டால் எதையும் ஆன்மாவால் அறிந்து கொள்ள முடியாது.

சிவபெருமான் பாச ஞானங்களினாலோ, பசு ஞானங்களினாலோ அறியப்பட முடியாத சிவமாகவுள்ளவர். பதி ஞானம் ஒன்றினாலே தான் அறிந்து கொள்ளக் கூடிய சத்தாக உள்ளவர் சிவபெருமான் அறியப்படத்தக்க சுட்டுப் பொருட்களெல்லாம் அசத்தானவை. மகா சங்கார காலத்தில் சத்துப் பொருட்கள் எவையும் இருக்க மாட்டாது.அதனால் சத்தாகிய பசுவுக்குரிய தனு, கரணாதிஸ்தூல பொருட்கள் எவையும் இராது.அசத்துக்களின் சூக்கும சொரூப சத்து இல்லை எனப் பொருள்படாது என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

பதி இலக்கணமாவது சிவசத்து.பாச ஞானங்கள் பசு ஞானங்களால் அறியப்படாமையினால் சிவம் என்றும், பதி ஞானத்தால் அறியப்படுவதால் சத்து எனவும் சொல்லப்படும்.பாச ஞானம் எனப்படுவது பிரபஞ்சத்தில் காணப்படும் அவன், அவள்,அது ஆகியவற்றை ஆன்மா சுட்டி உணர்வதற்கு உதவி செய்யம் பொறி,புலன்,கரணாதிகள். இவை சுட்டி நின்ற பொருளைக் காண்பதற்குத் துணைசெய்யாது.பசு ஞானம் என்பது கருவி கரணாதிகளாகிய பாச ஞானங்களின் துணையோடு புற விடயங்களை இது இதுவென்று பகுத்தறியும் தன்மையை உண்டாக்கும்

அறிவாகும்.இப் பசு ஞானம் புறத்திலே சுட்டிக் காணப்படும் சடப்பொருட்களை அறிந்து கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளதேயன்றி தனது உள்ளத்தில் அறிவுக்கறிவாய் உணர்த்தி நிற்கும் சிவனின் தன்மையினைக் காணும் திறனற்றது.பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அறியப்படாமையால் அவ்விரு ஞானங்களையும் விலக்கி பதி ஞானத்தால் மட்டும் தான் சிவத்தை அடையலாம் என்றும் பொறி,புலன் காரணாதிகள் யாவும் ஆன்மா சிவத்தை அடையத் துணைக் காரணிகளாக இருக்கும் என்றும், ஆன்மா அறிவுடையது அல்ல என்றும் அதனால் ஆன்மா சதசத்தென்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

ஆன்மா அறிவுடையதாக இருந்தாலும், மேற்கூறப்பட்ட கருவிகளின் துணையுடனேயே ஒரு பொருளை அறியும் தன்மை உடையது. அத்துடன் ஆன்மா தனது சுய அறிவின் மூலம் எதையும் சுதந்திரமாக அறிய மாட்டாது.

இவ்வாறு கருவிகளுக்கும் ஆன்ம அறிவிற்கும் அதீதமாக நிற்கும் சிவமானது ஆன்மாவின் அறிவுக்குள் அறிவாய் நின்று உண்மையை உணர்த்த ,ஆன்மா தன்னறிவின் மூலம், அனுபவ ஞானத்தின் மூலம் பதியைப் பற்றிய உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளும். உண்மைநிலையைப் பதி ஞானத்தால் உணர்ந்த ஆன்மா சத்தாயுள்ள சிவஞானத்தைப் பெற்றுக் கொள்ளும். இதை உணர்ந்து கொள்வதே பதி இலக்கணம் எனப்படும். இந்த உண்மையை ‘‘வாக்கு மனாதீதம்,’’ ‘‘வாக்மனாதீத கோ சரம்’’ என்பன நன்கு விபரிக்கின்றன.

சிவஞானபோதத்தின் முதல் ஆறு சூத்திரங்களும் பதி,பசு, பாசம் என்றும் முப்பொருள்களும் வேறு வேறானவை. அவை ஒன்றாகக் காணப்படுவதற்குக் காரணம் வியாபகம்,வியாத்தம் ,வியாப்பியம் என்னும் இலக்கணத்தால் அறியப்படும் அத்துவித இலக்கணமாகும்.

இதை உதாரண மூலம் விளக்குவதானால்,கடல் வியாபகம்,கடல் நீர் வியாத்தம்,அந்நீரில் உள்ள உப்புத் தன்மை வியாப்பியம். இவற்றுள் கண்களால் பிரதியட்சமாகக் காணப்படுவது நீர். சொல் அளவையால் அறிந்து கொள்ளப்படுவது கடல்.உண்ணும் அனுபவத்தால் தெரிந்து கொள்ளப்படுவது உப்புச் சுவை. இதுபோல உலகில் பிரத்தியட்சமாகக் காணப்படுவது பெருக்கத்தையுடைய உயிர்கள். அவற்றைப் பசுக்கள் என்பர்.வேத உபநிடதங்கள் ஏனைய நூல்கள் மூலம் அறியப்படுவது பதியாகிய பரம் பொருள்ஆன்மாக்களை அறியாமையில் அகப்படுத்தி, அவற்றை அனுபவத்தால் உணர்ந்து அறியச் செய்வது பாசம்.

கடல்,நீர்,உப்பு என்னும் மூன்றும் வேறு வேறாக இருப்பினும் அவை ஒன்றாகவே காணப்படும். அது போல பதி,பசு,பாசம் என்னும் மூன்றும் வேறு வேறு என்று சொல்லப்பட்டாலும் அவை ஒன்றாகவே காணப்படுகின்றன. கடல் என்று சொல்லும்போது நீரையும்,நீரின் உப்புத் தன்மையையும் சேர்த்துக் கூறுவது போல பதி என்னும் போது ஆன்மாக்களும் பாசமும் அதனுள் அடங்கும்.

மகா சங்காரத்தைச் செய்யும் சிவபெருமானே உலகின் முழு முதற் கடவுளாவார்.அவரே தனது

அளப் பெருஞ் சக்தியால் முத்தொழில்களையும் செய்கிறார்.இதன் மூலம் இறைவனது அத்துவித தத்துவம் உணர்த்தப்படுகின்றது. இறைவனது அத்துவிதத் தத்துவத்தை உணர்ந்து கொள்ளும் தன்மை ஆன்மாவுக்கு மட்டுமே உண்டு. இதன் மூலம் பதி, பசு,பாச இலக்கணம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆன்மா மும் மலச் செயற்கையால் தனது அறிவை முற்றாக இழப்பதால் அது தனது சுதந்திரத்தை இழந்து மலங்களுக்காட்பட்டு அதன் செயற்பாட்டுக்கிணங்கச் செயற்படுகிறது.மலத்தாற் பீடிக்கப்படாத சுதந்திரமுடைய கடவுள்.ஆன்மாவின் இன்பத்திற்காக செய்யும் செயல்கள் பற்றியும் விரிவாகக் கூறப்படுகிறது.அத்துடன் பசுஞானம், பாச ஞானம் பற்றியும் அவற்றால் பதியை அடைய முடியாதென்றும், பதியை அடைய பதி ஞானமே தேவையென்றும் கூறுகிறது.

ஏழாம் சூத்திரம் ஆன்மாவைப் பற்றிக் கூறுகின்றது. முத்தியின்பத்தை அனுபவிப்பது ஆன்மா. ஆன்மா சதசத்து. ஆன்மாவானது சத்தான சிவத்தையும் அசத்தாகிய பிரபஞ்சத்தையும் அறியும் இயல்புடையது. அத்துடன் ஆன்மா அறிவித்தால் தான் அறிந்து கொள்ளும் தன்மை கொண்டது. அத்துடன் படிகம் போலச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்பும் கொண்டது.இதனால் ஆன்மாவைச் சதசத்து என்று சிவஞானபோதம் கூறுகிறது.

சூரியன் எங்கும் பிரகாசிக்கிறான். இருள் உலகை மறைத்திருக்கிறது. சூரியன் உதிக்கும் வரை இருள் உலகைத் தனது மறைப்புக்குள் வைத்திருக்கும். இருள், சூரியனைப் பிரகாசிக்க விடாது மறைக்குமே

தவிர சூரியப் பிரகாசத்தின் முன் நிற்கும் தன்மை இல்லாதது. சூரியன் இருளை அகற்றும் சத்து. அதுபோலச் சிவம் உணர்வுடைய சத்து.பிரபஞ்ச ரூபமான பாசம் உணர்வில்லாத அசத்து. இதனால் சூரியன் இருட்டை அறிய வேண்டியதில்லை.அதுபோலச் சிவம் பாசத்தை அறிய வேண்டியதில்லை. அதனால் சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பாசத்தையும் அறிய வேண்டியது ஆன்மாவே.

கண் காணும் தன்மையுடையது. அது இருள் வராவிட்டாலும் இருளை அறிந்து கொள்ளும். சூரியன் தோன்றாமல் இருக்கும் போதும் சூரியனை அறிந்து கொள்ளும் தன்மையுள்ளது. கண் இருளாவதில்லை. அது போலக் கண் சூரியனாவதுமில்லை. அதுபோல ஆன்மா பாசமாகிய அசத்துமல்ல, சத்தான சிவமுமல்ல, ஆன்மா பாசமாகிய அசத்தையும், சிவமாகிய சத்தையும் அறியும் வல்லமை கொண்டது. பாசத்தையும் சிவத்தையும் தனது அறிவால் அறிந்து கொள்வதால் ஆன்மா சதசத்தென்பார். இதைச் சிவஞானபோதம், “இரு திறன் அறிவுள திரண்டவர் ஆன்மா” என்று கூறுகிறது.

ஆன்மா தனது கன்ம வினைக்கேற்ப பயன்களை அனுபவிக்கும்.ஆன்மாவின் தவப் பயனாக ஆன்மாக்குள் அந்தர்யாமியாகக் குடியிருக்கும் சிவன் ஞானகுருவாக வந்து சிவதீட்சை செய்வார். சிவனின் பெருமையை உணராது ஐம்புலன்களால் வரும் இன்பங்களே நிலையானவை என்று மகிழ்ந்திருந்த ஆன்மா தவப்பயனால் அவை யாவும் பொய்யென உணர்ந்து குருவை ஏற்றுக் கொள்ளும். அதனால் அது சிவனின் அடியை அடையும். சிவபெருமான் சர்வவியாபாகராக

நின்று ஆன்மாக்களுக்கு அறிவுறுத்தினாலும் தூலமான அறிவக் கொண்ட ஆன்மாக்கள் ஒரு பிறவியில் அதை உணர்ந்து கொள்ள மாட்டாது. பல பிறவிகள் எடுத்துப் படிப்படியாக விளங்கிக் கொள்ளும் தன்மையுடையது ஆன்மா.

சரியை,கிரியை ,யோகங்களின் மூலம் சாலோகாதி பத முத்திகளை அடைந்து உலக இன்பங்களையும் அனுபவித்து மீண்டும் மீண்டும் பூமியில் பிறந்து கன்மவினைகளை அனுபவித்து, வினைகளை நீக்கும் பொருட்டுச் சிவ சிந்தனையுடன் கூடிய பிறப்பெடுத்து சிவனை அடைய எண்ணும் தன்மையுள்ளது ஆன்மா.

சரியை,கிரியை,யோக மார்க்கங்களைப் போல யாக மார்க்கம் பயனைக் கொடுக்காது.யாக மார்க்கம் ஞானத்தைத் தடுத்து ஆன்மாவைப் பந்தத்துள்ளாக்கும். சரியை, கிரியை, யோக மார்க்கத்தினூடாக வரும் இன்பதுன்பப் பயன்களைச் சமமாக ஏற்றுக் கொள்ளல் இருவினையொப்பாகும் என்று சிவஞானபோதம் கூறுகிறது.

புண்ணியம் பத்து வகையானது. அவையாவன அபுத்தி, பூர்வம், புத்திபூர்வம், உபாயச் சரியை, உபாயக் கிரியை,உபாய யோகம், உபாய ஞானம் ,உண்மைச் சரியை,உண்மைக் கிரியை,உண்மை யோகம், உண்மை ஞானம் என்பனவாகும். சிவபெருமான் விஞ்ஞானகலருக்குத் தன்மையினின்றும் ,பிரளயாகலருக்கு உருவத் திருமேனியராய் முன் நின்று உபதேசிப்பர். சகலருக்கு அவர் வடிவாகிய மானிட வேடந் தாங்கி குருவாக வந்து உபதேசம் மூலமும், நூல்கள் மூலமும் அனுபவங்கள் மூலமும்

உணர்த்தி சிவதீட்சை கொடுத்து ஆட்கொள்வார். படிகக் கல்லிலுள்ள நிறங்கள் அப் படிகக் கல்லிற்கு வேறாக இருப்பது போல ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஐம்புலன்களும் தனக்கு வேறானவை என்பதை ஆன்மா உணர்ந்து தனது சிறப்பைத் தெரிந்து, சிவத்திற்கு அடிமையாகி அச்சிவம் தன்னிடத்தில் விளங்க நிற்கும். இதனால் ஆன்மாவை விட்டு ஐம்பொறிகளும் விலக அவ்வான்மாவிற்கு உற்ற துணையாய் இருக்கும் சிவம் ஆன்மாவுக்கு முத்தியாகிய பேரின்பத்தைக் கொடுக்கும். இந்நிலைக்கான ஆன்மா ஒருபோதும் சிவத்தை விட்டுப் பிரியாது சேர்ந்திருக்கும் என்று சிவஞானபோதம் கூறுகிறது.

ஆன்மாவானது ஐம்பொறிகளுடன் ஒப்ப அபேதமாகச் சேர்ந்திருந்தாலும், ஐம்பொறிகளின் உதவியுடன் விசயங்களை அறிந்து கொள்வது போலச் சிவஞானமானது பாச ஞானம்,பசு ஞானம் என்பவற்றோடு அபேதமாக விளங்கினாலும் பாச ஞானத்திற்கு பிரபஞ்சத்தைப் பற்றிய விளக்கமும், பசு ஞானத்திற்கு சிவஞான மூலம் வியாபக விளக்கமும் பெறும். ஐம்பொறிகளைப் போல உண்மை நிலையை விளங்காதிருக்கும் வியாபக அறிவுடைய ஆன்மாவானது பாய்ந்து வந்து கடலில் அடங்கிய ஆற்று நீரைப் போல ஐம்பொறிகளின் ஆற்றலடங்கிச் சிவத்துடன் நீங்காது கலந்து கொள்ளும்.

ஆன்மா அசத்தாகிய உலக விடயங்களை அறிந்து கொள்ளாமல் இருப்பதற்கு அசத்தாகிய கருவி காரணங்களே துணையாக இருக்கின்றன. இதுபோல ஆன்மா சத்தாகிய சிவத்தோடு சேர்ந்து சிவத்துடன் கலந்து நிற்பதற்கு ஆன்மாவுக்குள் உள்ளொளியாய் நிற்கும் சிவனருளே காரணமாகிறது. அசத்துடன்

சேர்ந்த ஆன்மா அசத்தாக நிற்கும் நிலை நீங்கி சிவத்தோடு சேரச் சிவனே குருவாக வந்து அறியாமையை நீக்கிச் சிவ தத்துவத்தை உணர்த்தி,மலங்களை அகற்றி, திருவருளைத் தந்து, தன்னுடன் சேர்த்து சிவசத்தாக்குவார் என்று சிவஞான போதம் கூறுகிறது.

ஆன்மாக்கள் உலகின் மாயத் தோற்றத்தைப் புரிந்து, அப் புரிந்துணர்வால் உண்மை நிலையை உணர்வதற்காகச் சிவன் தனு கரண புவன போகங்களை உண்டாக்கிக் கொடுத்துள்ளார். இந் நான்கினையும் கொடுத்த சிவன், சரியை,கிரியை,யோகம், ஞானம் என்ற நான்கு வகையான தவ சாதனங்களையும் கொடுத்துதவியுள்ளார். இவற்றின் மூலம் சிவஞானம் தோன்றும். அதனால் சிவனைப் பற்றிய உண்மை நிலை ஆன்மாவுக்குத் தெரிய வரும். சிவனருளின் பெருமையை உணர்ந்த ஆன்மா சிவஞானப் பேற்றைப் பெறும்.

இவற்றுள் தனுவாகிய உடலால் உண்டாகும் பாசத்தை நீக்கும் சரியை முறையும், மனம் முதலிய காரணங்களால் உண்டாகும் பாசத்தை நீங்குவதற்குக் கிரியை முறையும், புவனத்தால் வரும் பாசங்களை நீக்குவதற்கு யோக மார்க்கமும் ,போகத்தினால் உண்டாகும் பாசத்தை நீக்குவதற்கு ஞான மார்க்கமும் உதவி செய்யும்.

சரியை,கிரியை,யோகம் ஆகிய மூன்று மார்க்கங்களும் தொன்று தொட்டு ஆன்மாவைப் பிடித்திருக்கும் ஆணவ மலத்தைத் தளர்ச்சியுறச் செய்து அதை முற்றாக நீக்குவதற்குரிய மலபரி

பாகத்தைச் செய்யும்.மலம் நீங்கும் போது சிவசக்தி ஆன்மாவில் பதியும். இது சத்திநி பாகம் எனப்படும். சரியை,கிரியை,யோகம் ஆகிய மும் மார்க்கங்களும் ஆன்மாவை ஞானத்திற்கு இட்டுச் செல்லும். இந்நிலையில் ஆன்மா அறிவுக்கறிவாய் நின்ற பரம் பொருளான சிவனை உணர்ந்து கட்புலனால் தன்னைக் கண்டு தானாகவே சிவஞானத்தை உணரும். சிவஞானத்தைக் கொடுப்பதற்காக சிவன் குருவாக வந்தமர்ந்திருப்பார்.

சரியை,கிரியை,யோக மார்க்கத்தில் முற்றுப் பெற்ற ஆன்மாக்களுக்கு விடய அனுபவங்களுக்குரிய விடய உணர்வுகளை அறிவுக்கறிவாக உள் நின்று உணர்த்திப் பரவசப்படுத்தியவற்றை போலல்லாது சிவானந்த அனுபவத்திற்குரிய பேரின்பத்தை குருவாக எழுந்தருளி காட்சி தந்து உணர்த்துவார்.

இதற்குக் காரணம் விடய ஆனந்த அனுபவங்களுக்குரிய பொருட்களெல்லாம் வெளியேயுள்ளன. அத்துடன் அவை யாவும் மலம் சம்பந்தப்பட்டவை. மலங்கள் ஆன்மாக்களின் அறிவை மறைப்பவை. துன்பங்களை இன்பங்களாகக் காட்டுபவை. மலத்தை ஆன்மா தன்னை விட்டு நீக்க வேண்டும். நீக்கினால் தான் சரியை,கிரியை,யோக மார்க்கங்கள் பூர்த்தியாகும். இதற்காகத் தான் சிவன் ஆன்மாக்குள் உள்பொறியாய் நின்று உணர்த்தி வந்தார். இப்பொழுது ஆன்மா பெற்றது ஞானம், அதுவும் சிவஞானம். சிவஞானம் திருவருளாற் கிடைப்பது. திருவருள் சிவனது ஞானம். இந்த ஞானம் சிவன் மீது பேரன்பு கொள்வதன் மூலம் உண்டாகும்.

தனக்குப் புறம்பான பொருட்களையே கண்டு களித்த ஆன்மா ஞான நிலையில் தன்னுள் உள்பொறியாக இருக்கும் சிவனை சிவன் உணர்த்தக் கண்டு கொள்ளும்.

ஆன்மாவின் அகத்தில் உள்ளவற்றையும், புறத்தில் உள்ளவற்றையும் உணர்த்துகின்ற செயலையும் அவற்றை உணரச் செய்யும் செயலையும் சிவம் செய்யாவிட்டால் ஆன்மாவால் அவற்றை உணர்ந்து கொள்ள முடியாது. அத்துடன் அதற்கான பயனையும் பெறமுடியாது. இவ்வாறு ஆன்மாவுக்கு உணர்த்தி ,அப்படி உணர்த்துவதை அறியச் செய்து, மலங்களைப் படிப்படியாக நீக்கிய பின் ஞானத்தையும் அருளையும் உணர்த்தி அவ்வுணர்வுகள் மூலம் தனது பெருமையை உணரச் செய்து, தன்னருளில் நிலை நிறுத்தும் பின் ஆன்மாவை ஆட்கொண்டு என்றும் பேரின்பத்தைத் தரும் முத்தி நிலையைக் கொடுக்க விரும்பிச் சிவம் குருவாக வந்து காட்சி கொடுக்கும். அதன் பின் உடலைத் தீண்டி,தீட்சை கொடுத்து, ஞான நோக்கால் நோக்கி, ஞானத்தை உபதேசித்து ஐம்பொறிகளால் வரும் உணர்வுகளை நீக்கி ,அவ்வுணர்வுகளால் வந்த சிற்றின்பங்களை ஒதுக்கி ,ஆன்ம அறிவை விளங்கச் செய்து, அறியாமையை நீக்கி வைக்கும்.

இந்திரியங்களின் உணர்வு பஞ்சேந்திரியங்களின் வாயிலாக ஐந்துணர்வாக இருக்கும் ஆன்ம ஞானம் தனியே விளங்காது ஐந்துணர்வுகளோடு கலந்து அவ்வறிவுகளாகவே இருக்கும். சிவஞானம் ஆன்ம அறிவைக் கீழ் நிலைப்படுத்தி ,மேம்பட்டிருந்த ஐயுணர்வுகளையும் கீழ்ப்படுத்தி அவ்வுணர்வுகளில் மயங்கிக் கிடந்த ஆன்ம அறிவை முன் நிலைப்படுத்தி பதிஞானத்தால் சிவனருளை அடையச் செய்யும்.

இதனால் ஆன்மா சுத்தமான படிகத்தைப் போலாகி விடும்.

சுத்தப்பட்ட ஆன்மா சிவத்தோடு சேர்ந்து விடுவதால் அது தனது செயலை இழந்து விடும். ஐம்புலன்களால் உண்டான இன்ப துன்பங்கள் இல்லாமற் போவதால் ஆன்மாவுக்குச் சிவசிந்தனையைத் தவிர வேறு எதுவும் இருக்கமாட்டாது. பசு ஞானத்தினாலும், பாச ஞானத்தினாலும் அறியப்பட முடியாத சிவனை, அவருடைய அருள் ஞானக் கண்ணால் ஆன்மா ஆராய்ந்து பற்றுதல் வேண்டும். புறப் பொருட்களைக் காணும் கண் தன்னையறியாதது போல, தத்துவ தாத்துவிகங்களை அறிந்து கொள்ளும் ஆன்மா தன்னையும் தனது செயல்களுக்குக் காரணமான சிவனையும் அறியமாட்டாது.சிவன் தான் தன்னைச் செயற்படுத்துபவர் என்பதையும், அசத்துப் பொருட்கள் யாவும் நிலையில்லாதனவென்றும் பதிஞானமூலம் ஆராய்ந்து தெரிவு பெறும் ஆன்மாவுக்குச் சிவஞானபோதம் வெளிப்படும். சிவஞானபோதம் வெளிப்பட்ட மாணவனுக்கு ஆசாரியார் சித்தாந்த மகா வாக்கியங்களை உபதேசிப்பார். அப்பொழுது அந்த மாணவன் சோகம் பாவணையை நாள் தோறும் பயின்று வந்தால் மாயா கன்மங்களை விட்டு நீங்குவான்.

ஐம்புலன்களுக்கு வேறாகத் தன்னைக் காண்பதும் பிரபஞ்சம். நிலையில்லாத மாயத் தோற்றத்தை உடையது என்று உணர்தலும் சிவப்பேற்றைத் தரும் இரு சாதனங்களாகும். இச் சாதனங்களால் சிவஞானம் தோன்றும். இந்நிலையில் ஸ்ரீபஞ்சாக்கரத்தை முறைப்படி கணித்தல் வேண்டும்.

அ.ஃ.தாவது ஞானத்திற் கிரியையாகிய சிந்தித்தல் வேண்டும். இதயத்தையும் ,நாடியையும் புருவ நடுவையும் முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத் தானம் எனக் கொண்டு முப்பத்தாறு தத்துவங்களால் அமைந்த இதயத்துள் அமர்ந்த பஞ்சாக்கர திருமேனியில் கொல்லாமை முதலிய அட்ட புஸ்பங்களைக் கொண்டு பூசித்தல் வேண்டும். அவ்வாறு பூசித்தால் சிவபெருமான் ஆன்மாவின் அறிவுக்குள் அறிவாய் விளங்கி நிற்பார்.

ஆன்மா தன்னறிவின்றி ஐம்புலனுணர்வுகளில் மயங்கிக் கிடப்பது .ஆன்மாக்களின் ஐம்புல அறிவையும் நீக்கி தன்னறிவு பெற வைப்பது சிவஞானம். அச் சிவஞானம் திருவருளாற் கிடைப்பது. சிவனருள் கிடைக்க வேண்முமானால் ஆன்ம சுத்தி வேண்டும். ஆன்மாவைச் சுத்திகரிப்பது சீல பஞ்சாக்கரம்.ஆன்மாவைச் சுத்திகரிக்கவே சிவன் குருவாக வருவார்.

நாகரம் முதலாக உச்சரிக்கப்படும் பஞ்சாக்கரத்தை (சிவாயநம) சூக்கும பஞ்சாக்கரம் என்றும் சொல்வர். நாகார மாககாரங்களாகிய (ந.ம) இரண்டு எழுத்துக்களை விட்டு ஏனைய மூன்றெழுத்தை (சிவாய) என்று உச்சரிப்பதை அதிசூக்கும பஞ்சாட்சரம் என்றும் பெரியவர்கள் சொல்வார்கள்.

இம் மூவகைப்பட்ட பஞ்சாக்கரத்தையே குரு சீடனுக்கு உபதேசிப்பார். இவற்றை சிரவண முறையில் தருதல், அருளிடை வைத்தல் என்று கூறப்படும். சிரவணமுறை என்பது ஆன்மா மலத்துடன் இருப்பதால் நமஸ்காரம் சிவனுக்கென்று கூறி நமசிவாய என்ற தூல பஞ்சாக்கரத்தை உபதேசித்தல், பின்பு சீடனின்

சிந்தனையில் சிவனை நிறுத்துவதற்காகச் சூக்கும பஞ்சாட்சரமான சிவாயநம என்ற பஞ்சாட்சரத்தை அருளுவார். சூக்கும பஞ்சாக்கரத்தை சிந்தையில் நிறுத்திய சீடனின் சிந்தையில் நிற்கும் சிவன் மலம் வந்து சாரா வண்ணம் அவனைத் தம்மிடத்தேவைத்து தான் தன் அருளோடு முன்னும் பின்னும் காத்து (சிவாயநம) ஆன்ம சுத்தி செய்து அதி சூக்கும பஞ்சாக்கரத்தைக் கொடுத்தருள்வார்.

சிவஞானபேற்றைப் பெற்ற ஆன்மா சிவனோடு வேறுபாடு காணப்படாது கலந்து முக்தி நிலையில் ஏகனாகி நிற்கும் என்றும் இந்நிலையில் ஆன்மா தான் என்ற எதுவும் இல்லையென அறிந்து சிவனே எல்லாம் எனக் காணும் என்றும், இதனால் மலம் முழுவதும் நீங்கிச் சிவனந்தத்தை அடைந்து ஏகனாகி நிற்கும் என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

ஆன்மா தன்னையும் சிவத்தையும் வேறு வேறாகக் காணப்புகின் தற்போதம் என்ற முனைப்புத் தோன்றும். அப்படித் தோன்றுவது திரிவுக் காட்சி என்றும் கண்ணானது, இது விளக்கொளி இது சூரியவொளி, இது சந்திரனொளி எனப் பிரித்தறிவது போல ஆன்மாவானது சிவனது பெரும்பேற்றை உணர்ந்து முழுவதும் சிவனேயெனத் தெரிந்து கொள்ளல் தெளிவுக் காட்சி. பசு பாசங்களின் உண்மை நிலையை உள்ளவாறு உணர்ந்த ஆன்மா, தான் செய்பவற்றையெல்லாம் சிவ நினைவுடன் செய்தலே இறைபணி நிற்றல் ,ஏகனாகி நிற்பதால் மலங்கள் நீங்கும். இறைபணி நிற்றலால் பிராரத்த வினையும் ஆகாமிய வினையும் பந்தப்படாது ஆன்மாவினது உடலின் அனுபவமாகக் கழிந்து விடும். ஏனையோர்க்கு

அது ஆன்மாவின் அனுபவமாகப் பிறவிகள் தோறும் சென்று வருத்தும் என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

இவ்வாறான இருவேறுபட்ட நிலையிலும் சிவபெருமான் விருப்பு வெறுப்பற்றிருப்பார்.சிவயோக பாவணை செய்யும். ஞானிகளுக்கும் பயிற்சியின் காரணத்தால் தற்போதம் முனைப்புக் கொள்ளுமிடத்து பிராரத்த வினை வந்து சேர்ந்தாலும் அது சிவனருளால் அது பிறவிக்கு வித்தாகாது.தனு கரண மயேயத்தோடு அழிந்து விடும். அத்தகைய ஞானிகள் ஐம்புலன்களின் செயல்களுக்குட்பட்டாலும் அச் செயல்கள் தாமரை இலையில் உள்ள நீரைப் போல மனதுடன் ஒட்டாமலே இருக்கும்.சத்தோடு சேர்ந்து சத்தாகவும், அசத்தோடு சேர்ந்து அசத்தாகவும் இருக்கும் ஆன்மாவின் உண்மை நிலையை உணர்ந்தோர் திருவருளின் துணையோடு சிவத்தைக் காண்பார்களே தவிர வலிமையில்லாத ஐம்புலன்களில் வலையில் அகப்பட மாட்டார்.

ஆணவ முனைப்பு நீங்கி முற்றுப் பெற்றுச் சிவனோடு ஏகனாகி நிற்கும் ஆன்மா யான் எனது என்ற முனைப்பு நீங்கிச் சிவத்துடன் கலக்கும் என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

உடம்புள்ளவரை கர்மம் இருக்கும்.கர்மம் மூலம் உடம்பு வினைப் பயனை அனுபவிக்கும் .முயற்சியும் கர்மபயனும் உடல் உள்ளவரை நீங்காது. அதனால் சிவன் முயற்சியும் வினைப்பயனும் நீங்கும் வண்ணம் அருட்செயல்களை நிகழ்த்தி அச் செயல்களில் ஆன்மாக்களை ஈடுபடுத்தி அவ்வருளில் மாறாது நிற்கச் செய்யும்.இதன் பயனாகச் சீடன் கேட்டல் ,சிந்தித்தல் ,தெளிவடைதல் மூலம் சிவனிடத்து ஏகனாகி நிற்றலாகிய நிட்டை கூடப் பெறுவான். இவ்

வேளையில் பெருங்காயம் வைத்த பாத்திரத்தில் பெருங்காயமில்லாத போதும் அதன் வாசணை இருப்பதைப் போலச் சீடனது உடலில் பாசகாரியங்கள் நிற்கும்.இதன் காரணமாக யான், எனது என்ற செருக்கும் அதனால் உண்டாகும். வினைப்பயனும் முயற்சியும் ஆகிய அஞ்ஞான கன்மங்களாகிய பாசம் தளவுற்றுத் தாக்கும். இவ்வாறு பாசங்களோடு கூடிய ஆன்மா சிவனது பாதங்களை அடையாது. இதற்காகச் சிவன் ஆன்மாவை நடுவே வைத்துத் தான் இரு கரைககளிலும் இருந்து அக்ஞான கர்மமான பாசத்தைச் சுட்டெரிப்பார் என்று சிவஞானபோதம் கூறுகிறது.

ஏகமான இறைபணி நிற்கும் ஆன்மாவிற்கு விடயங்களைக் காட்டுவதோர்டு தானும் ஆன்மாவின் சிற்சக்தியோடு கூடச் சென்று விடயத்திலும் காத்து நின்று காணுதலும் செய்கின்றான். இதனால் சிவப்பேறு எனும் ஆன்ம இன்பம் ஏற்படுகிறது.சிவபோதமடைந்த ஆன்மாவானது ஒரு விடயத்தை அறியுமிடத்து சிவனது சிற்சக்தி ஆன்மாவினது சிற்சக்தியெனப் பேதமின்றி உடனாய்க் கலந்து நிற்கும். சிவன் ஆன்மாவுடன் கலந்து நின்று விசயங்களை அறிவிக்க, ஆன்மா அறிந்து கொள்ளும். இறைவன் ஆன்மாவின் மேலுள்ள கருணையினால் ஆன்மாவுடன் கலந்து நின்று உதவுவதால் ஆன்மாவின் பசுத் தன்மை நீங்காத பெத்த காலத்தில் ஆன்மாவேயெனும்படி கலந்து நின்று விடயங்களை அறிவிக்க ஆன்மா அறிந்த போதும்,அது தானே அறிகிறதாக எண்ணும். அதனால் அவ்விடயங்களால் வரும் இன்ப துன்பங்களை ஆன்மாவே அனுபவிக்கும். பசுத்தன்மை நீங்கிய பின் அடையப்படும் முத்திக்காலத்தில் ஆன்மா துன்பநிலை

நீக்கி இறைவனின் பணியைச் செய்கின்றமையால் அது சிவனுடன் கலந்து ஒற்றுமைப்பட்டுச் சிவ சிவனே எனும்படி நின்று விடயங்களை அனுபவிக்கிறது. இந்நிலையில் விடயங்களால் வரும் இன்பதுன்பங்கள் ஆன்மாவைச் சென்றடையாது. விடய, விடயங்களில்லாமையால் ஆன்மா பேரின்பத்தை அனுபவிக்கிறது. சிவனால் அளிக்கப்பட்ட உபகாரத்தை ஆன்மா ஒருபோதும் மறவாது. திருவருளை உறுதியாகப் பற்றிச் சிவனருள் வழி நிற்கும் ஆன்மாவிற்கு சிவானந்த அனுபூதி நிட்டை கிடைக்கப் பெறும்.

பரமுத்தி நிலையில் அன்பு நிகழாதாயின் ஆன்மா சிவானந்த அனுபவத்தைப் பெறாது. சிவன் பெத்தர், முத்தர் என்று இரு திறத்தாரிடத்தும் அத்து விதமாக ஒப்ப இருப்பினும் பக்குவப்பட்ட ஆன்மாக்களின் அறிவையே பூரணப்படுத்துவார்ஆன்மாவைப் பற்றிப் பிடித்திருக்கும் ஆணவ மலத்தை நீக்கி சிவானந்த போதத்துள் அமிழச் செய்து ஆன்மாவைத் தம் வசப்படுத்துவது சிவனின் விளையாட்டாகும்.

இந்நிலையில் உள்ள ஆன்மா சிவனுக்கு அடிமையாகி விடுகிறது. ஆன்மா மலத்தினால் கேவலாவத்தையும், காலாதி தத்துவங்களினால் சகலாவத்தையும் அடையும். இந்நிலையில் சிவனின் அருளால் ஆன்மா சுத்தாவத்தையை அடைந்து வியாபகமாக விளங்கிச் சிவானந்தத்தை அனுபவிக்கும் என்று சிவஞானபோதம் கூறுகிறது.

ஏகனாகி நிற்றலாகிய நிட்டை கைவரப் பெற்ற ஆன்மாவுக்கு முனைப்பாக இருந்த நான், எனது என்னும் பாசத்தைச் சிவன் முன்னும் பின்னும்

சென்றிருந்து இல்லாற் செய்வதோடு தன்னைக் காட்டி வரும் வினைப் பயன்களையும் அது பற்றி வரும் முயற்சிகளையும் கண்டு அவற்றால் வரும் இன்ப துன்பப் பயன்களைச் சாரவிடாது ஆன்மாவைத் தன்னுடன் சேர்த்து ஏகனாகி நிற்கும் அத்துவித நிலையைக் கடைப்பிடிக்க வைத்து, ஆன்மாவினுடைய அறிவைத் தனது பெருமைகளை அறிவதாலும், அதன் இச்சையைத் தன்மீது செலுத்துவதாலும், அன்பு செலுத்தலாலும் ,தொழிலைத் தனது திருவடியை நினைத்தலினாலும் முன்வைத்து நிற்கச் செய்து சிவானந்த அனுபூதியில் ஆன்மாவை ஆழ்துவான் என்று சிவஞானபோதம் கூறுகிறது.

சிவன் முத்தரது அறிவும் இச்சையும் கிரியையும் புறத்தே நிகழும் போது அவர்களது அறிவானது மும்மல அழுக்கைச் சிவனருளாற் போக்குதலிலும் ,அவர்களது இச்சை மெய்ஞ் ஞானிகளுடன் கலந்து உறவாடுவதிலும் அவர்களது கிரியையானது சிவனடியார்களையும் சிவலிங்கத்தையும் வழிபடுதலில் ஈடுபட்டிருக்கும்.ஏனைய இடங்களில் அவர்கள் சடமாகவே இருப்பார்கள்.இவ்வகையான வழிபாட்டால் அவர்களுக்கு சிவஞானமேற்படுவதோடு உலகப் பற்றுக்கள் அவர்களைத் தாக்காமற் போகும். பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கும் உடம்பு உள்ளவரை பிராா்த்த வினை இருக்கும்.அதனால் சீவன் முத்தர்கள் கா்ம பலன் காரணமாக வினைகளாற் தாக்கப்படும் வேளைகளில் திருவருள் அதை அழிக்க வழிவகை செய்யும்.

மும்மலங்களும் சமயம் வாய்க்கும் போது ஆன்மாக்களை மயக்கமடையச் செய்யும் வல்லமையுள்ளன. சீவன் முத்தர் அல்லாதோர்

தமக்கியையவாகச் சந்தர்ப்பங்களை உண்டாக்கி ஆணவம் முதலிய மும்மலங்களை வளர்த்துக் கொள்வர்.இதனால் சீவன் முத்தர்கள் இப்படியானவர்களைக் காண்பதிலிருந்து விலகிச் சிவனடியார்களுடன் சேருதல் வேண்டும்.சிவனடியார்களுடன் சேர்ந்திருப்பது ஐம்புல வேடர்களின் தாக்குதலுக்கு உள்ளாகாது வேலியமைத்து இருப்பதைப் போன்றதாகும். சிவானந்த போதத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுடன் சீவன் முத்தர்கள் சேர்ந்திருப்பதால் உலகியல் உணர்ச்சிகள் தேய்ந்து தேய்ந்து போகச் சிவானந்த போகம் மேலோங்கி வளரும். அதன் பின் பிரார்த்த வினையின் முனைப்பு இல்லாமற் போய் விடும். இவர்கள் அவ பக்தரது சேர்க்கையை முற்றாக நீக்குதல் வேண்டும்.

சிவபெருமான் பிரபஞ்சம் முழுவதிலும் பாலில் நெய்போல வியாபித்திருக்கின்ற போதும் சிவனடியார் திருவேடத்திலும், சிவலிங்கத்திலும் தயிரில் நெய் போல இருக்கிறார்.சிவனடியார்களைச் சிவனெனக் கருதி, கண்டு வழிபட அவர்களின் வேடம் , பாவணை, செயல்,தன்மை என்ற நான்கினுள் ஒன்றிருந்தாலே போதும்.

சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தை சரியாபாதத்தினரும்,கிரியா பாதத்தினரும் ,யோகா பாதத்தினரும், ஞானா பாதத்தினரும் தத்தமது மன ஒடுக்கத்திற்கேற்றவாறு வழிபடலாம்.சிவபெருமான் பிரபஞ்சமெங்கும் அபேதமாயும், பேதமாயும் பேதாபேதமாயும் உள்ள நிலை அல்லராயும், அம் மூன்று நிலைக்கும் பொதுவான கண்ணொளியம் ஆன்ம போதமும் போல

அத்துவித நிலையினராய் இருக்கிறார். இதனால் அவரை அன்புடன் வழிபடல் வேண்டும். பிரார்த்த வினை கழிவதற்காகச் சிவலிங்கத்தையும் சிவனடியாரையும் சிவாச்சாரியாரையும் அன்புடன் வழிபடல் வேண்டும் என்று சிவஞானபோதம் கூறுகிறது.

சிவானந்தப் பேற்றில் கலந்திருக்கும் சீவன் முத்தர்களுக்குப் பிரார்த்த அனுபவம் இருக்கும். அந்த அனுபவம் வரும் போது உலக விஷயங்கள் மனதில் தலை தூக்கும். இவ்வேளையில் சிவனது திருவடியை அடைந்திருக்கும் நிட்டையில் இருந்த அறிவு, இச்சை, செயல்கள் ஆகிய மூன்றம் தொழிற்பட்டு உலக விடயங்களில் ஈடுபடும். அங்ஙனம் செல்லும்போது அறிவானது இச்சையையும் உணர்த்தும்.

அறிவு செல்லுமிடம் சிவாலயம்.சிவன்,பாச ஞானமான வாக்கிற்கும், பசு ஞானமான மனதிற்கும் எட்டாதவன். அவன் பதி ஞானமான அன்புக்கே ஆட்படுவான். அன்புக்கு அகப்படுபவனான சிவன் அடியார்கள் வழிபடுவதற்கு உரியவனாகி மனதிற்கும் வாக்கிற்கும் எட்டுவதற்காகச் சிவாலயத்தில் குடி கொண்டுள்ளான்.அதை அறிவின் மூலம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

மனிதரது இச்சை சிவனடியார்களிடத்துச் செல்லுதல் வேண்டும் சிவனடியார்களின் உள்ளத்தில் சிவன் தயிரில் நெய் போல வீற்றிருக்கிறான் .இதனால் சிவனடியார்களை அன்புடன் பூசித்து அவர்களின் தாழ் பதிந்து, இனிய வார்த்தைகள் பேசி உணவளித்துப் போற்றி வழிபட்டால் சிவன் வழிபடுபவர்கள் மீது, அன்பு கொள்வான். அதனால் மக்களின் இச்சை சிவனடியார்களை நோக்கிச் செல்லுதல் வேண்டும்.

மனிதனது செயல்கள் சிவனடியார்களின் திருவேடத்தில் பதிதல் வேண்டும். காமக்கிழத்திகளது ஆடை, அணிகலம், நறுமணப் பூச்சுக்கள் ,அலங்காரங்கள் காமுகர்களை வசீகரித்து அவர்களுக்கு பெரும் இன்பத்தைக் கொடுப்பது போல் மனிதர்களது செயல்கள் யாவும் திருவேடத்தை நோக்கிச் செல்லுதல் வேண்டும் என்றும் சிவஞானபோதம் கூறுகிறது.

அறிவு, இச்சை,செயல்கள் மூலம் நிட்டை ஏற்படும். அந்நிட்டை வழியாகச் சிவானந்த இன்பத்தை அனுபவிக்கும் சீவன் முத்தர்கள் பாசத்தினைக் கொடுக்கும் மும்மலங்களையும் விலக்கி விடுவதோடு அம் மும்மலங்களையுடையவர்களுடன் சேரவும் மாட்டார்கள். அத்துடன் சிவனடியார்களையும் திருக்கோவிலில் உள்ள சிவலிங்ககத்தையும் சென்று வழிபட மாட்டார்கள்.நிட்டையில் சிவனுள் அவர்கள் கலந்திருப்பார்கள். அவர்கள் தமது அறிவு இச்சை செயல்கள் யாவற்றையும் சிவனிடத்தும் சிவனடியார்களிடத்தும், அவர்களது திருவேடத்திலும் செலுத்திப் பதிஞானமாக நிற்கின்ற சிவனை உணர்ந்து அதனால் உண்டாகும் சிவப் பிரகாசத்துள் மூழ்கி நிட்டையில் இருந்து சிவானந்தமாகிய பேரின்பத்தை அனுபவிப்பார்கள்.அவர்களது அறிவிலும் இச்சையிலும் செயலிலும் சிவன் பிரகாசமாக நிற்பதால் பிரபஞ்சத்தை வென்று சிவானந்த அனுபூதிமான்களாக நிட்டையிலிருந்து நீங்காமல் இருப்பர் என்று சிவஞானபோதம் கூறுகிறது.

## பொது அதிகாரம்

## பதிப் பிரமாணவியல்

சிவஞானபோதம் பொது அதிகாரம் சிறப்பதிகாரம் என்ற இரு அதிகாரங்களை உடையது.பொது அதிகாரத்தில் பிரமாணவியலும், இலக்கணவியலும் ,சிறப்பதிகாரத்திலே (உண்மை) சாதன இயலும் பயனியலும் உள்ளன.

பிரமாணவியலில் உலகத்திற்கு முதற் கடவுளாகிய பதி ஒருவர் உள்ளாரென்று அனுமானப் பிரமாணம் கொண்டு நிலை நிறுத்தப்படுகின்றது.அப்படி நிலை நிறுத்தப்பட்ட முதற் கடவுள் சிவபெருமான் என்று வலியுறுத்தப்படுகிறது. சங்கார காரணனான சிவபெருமானைக் கர்த்தாவாக உள்ளது இவ்வுலகம் என்று கூறுகிறது.

## பிரமாணவியல்

## முதற்சூத்திரம்

**அவனவ ளதுவெனும் மனைமூ வினைமையிற்**

**றோற்றிய திதியே யொடுங்கி மலத் துளதாம்**

**அந்தம் ஆதி என்மனார் புலவர்.**

இச் சூத்திரமானது சங்காரகாரணராயுள்ள (அழித்தலைச் செய்யும்) கடவுளே உலகின் முதல்வர் என்று கூறுகிறது.

அவன் என்றும், அவள் என்றும், அது என்றும் சுட்டியுணரப்படும் உலகம் பொருட் பிரபஞ்சம், சத்தப் பிரபஞ்சம் என இரு வகைப்படும். அவை தோன்றுதல், நிலை பெறுதல், அழித்தல் என்னும் முத்தொழில்களை உடையமையால் அது ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட உள் பொருளாகும்.இத்தகைய உலகத் தொகுதியானது தன்னை அநாதியிலிருந்து பற்றிப் பிடித்துள்ள ஆணவ மலத்தை நீக்குவதற்காக, தான் ஒடுங்குவதற்குக் காரணமாக இருந்த கடவுளிடத்திலிருந்து மீளவும் தோன்றும். இதனால் சங்காரத்தைச் செய்யும் கடவுளே உலகிற்கு முதற் கடவுளாவார் என்று அறிஞர்கள் கூறுவர்.

**நுதலிய பொருள்:-** கடவுளின் இருப்புக்கு பிரமாணம் கூறுவது

இச் சூத்திரம் மூன்று அதிகாரங்களை உடையது

**முதல் அதிகரணம்:** உலகமென்ற இப் பிரபஞ்சம் பிறப்பு, இருப்பு ,இறப்பு ஆகிய முத்தொழில்களை உடையது.

**மேற்கோள்:-**என்று உள்ளதாய், அவன்,அவள், அது என்று சொல்லப்பட்ட உலகத்தின் உற்பத்தித் திதி நாசம் உடையது.அதாவது பிறப்பு அழிவுடையது.

**இரண்டாம் அதிகரணம்,**அது அரனாலே உடையது

**மேற்கோள்:-** இல்லாதவற்றிற்குத் தோற்றமில்லையாயின், உள்ளதற்குச் செய்வோரின் செய்வினையின்மையின் ,ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை என்றது.

**மூன்றாம் அதிகரணம்**-மற்றிருவரும் முத் தொழிற்படுவார்கள்.

**மேற்கோள்**-இனிச் சங்காரமே முதலென்றது

சங்காரம் ஐந்து வகைப்படும். அவை,நிவிர்த்தி கலைச் சங்காரம், பிரதிட்டா கலைச் சங்காரம், வித்தியா கலைச் சங்காரம், சாந்தி கலாச் சங்காரம், சாந்திய தீத கலா சங்காரம்

இதில் சாந்தியதீத கலா சங்காரம் மகா சங்காரம் என்று அழைக்கப்படுகிறது.

நிவிர்த்தி கலை சிருஷ்டி சங்காரத்தைச் செய்பவர் பிரமா.பிரதிஷ்டாக் கலை ஸ்திதி சங்காரத்தைச் செய்பவர் விஷ்ணு.வித்தியாகலைச் சங்காரத்தைச் செய்பவர் உருத்திரன். சாந்தி கலா சங்காரத்தைச் செய்பவர் மகேஸ்வரர். சாந்திய தீய கலை சங்காரத்தை செய்பவர் சதாசிவர். சதாசிவர் மந்திர ஆன்மாவாகவும், மந்திர சொரூபியாகவும் ,சர்வ மந்திரங்களுக்கு அதிபதியாகவும் சிருஷ்டி சங்காரங்கள் செய்பவராகம் உள்ளமையால் அவரை மகா சங்கார ருத்திரர் என்று சொல்லப்படுகிறது.

மகா சங்காரத்தின் போது அந்தத்தக்கலா தத்துவங்களோடு அதன் சிருஷ்டிச் சங்காரங்களை செய்யும் சங்கார கர்த்தாக்களும் அழிக்கப்படுவர்.

சிவனே மகா சங்கார கர்த்தா எனவும், அவர் பிரம்மா விட்டுணுக்களையும் புவனத்தையும் சங்கரிப்பார். அவரை யாரும் சங்கரிக்க முடியாது. இவர் சிருஷ்டி திதி சங்காரம் என்ற அனைத்திற்கும் காரணமானவர் .இவரைச் சுகாசனத்தில் இருந்து

புஷ்பத்தைக் கைகளிலே கொண்டு சதாக்கிய தத்துவத்துச் சதாசிவரில் ஆவாகனம் செய்க என்று மகுடாகம் கூறுகிறது. முதலாவது சூத்திரம் அவன், அவள், அது என்று கூறப்பட்ட பிரபஞ்சம் முத்தொழில்களை உடையது. இவ்வுலகம் தானாகத் தோன்றவில்லை. முதல்வன் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டது. பின் அது தோற்றுவிக்கப்பட்ட முதல்வரிடத்து ஒடுங்கி பின் அவனிடத்திலிருந்தே தோன்றும் என்றும் கூறி அதை மறுத்துரைக்கும் ஏனைய சமயத்தவர்களுக்கு அதை நிலை நிறுத்திக் காட்டுகிறது.

பிரபஞ்சம் நித்தப் பொருள் .அது முத்தொழில்களை உடையது என்ப பொருந்தாது என்று கூறும் மீமாஞ்சகரது கொள்கையை நிராகரித்து உலகம் முத்தொழிலுடையது என்பதை ஆதாரபூர்வமாக உறுதி செய்கிறது.

காட்சி,அனுமானம், உரை என்னும் மூன்று பிரமாணங்களில் காட்சிப் பிரமாணமே உண்மையானது காட்சிக்கு எட்டாத பொருட்கள் எவையும் இல்லை என்று உரைக்கும் உலகாயுதர் கொள்கைகளையும் உலகம் இல் பொருளாகையால் அது தன் சார்பிலே தோன்றி அழிவடையும். ஆதலால் அதைத் தோற்றுவிக்கக் கடவுள் தேவையில்லை என்று புத்தரின் கொள்கையையும் பிரபஞ்சம் உள்ள பொருள் .அதனால் அதைத் தோற்றுவிக்கக் கருத்தா தேவையில்லை என்ற சாங்கியர்களது கொள்கையையும் ,பிரதிஸ்டா கலை ஸ்திதி சங்கார கர்த்தாவான விஸ்ணுவே முழு முதற் கடவுள். அவரே உலகத்தைத் தோற்றுவிப்பவர் என்று கூறும் பஞ்ச ராத்திரிகர் கொள்கைகளையும் தனித்து ஒருவர்

உலகைப் படைத்திருக்க முடியாது . பிரமா முதலிய பலர் தேவை என்று கூறும் அநேகசுவர வாதிகளின் கொள்கையையும் ஆன்மாக்கள் மலம் நீங்கப் பெற்ற முத்தி நிலையில் பஞ்ச கிருத்தியம் செய்வார் என்று கூறும் சிவசமயவாதிகளின் கொள்கையையும், பிரமமே சத் சித் ஆனந்தமாய் நித்தமாய் வியாபகமாய் உள்ளது. மற்றவையெல்லாம் தோற்றங்கள் என்ற ஏகான்மவாதிகளின் கொள்கையையும் சிலந்தி தனது உடலில் இருந்து எடுக்கும் பொருட்களைக் கொண்டு வலையை உண்டாக்குவது போல இறைவன் தன்னுள் அடங்கியுள்ள பொருட்களைக் கொண்டு உலகைப் படைக்கிறான் என்ற விசிட்டாத்வைதிகளின் கொள்கையையும் மறுத்து உறுதிப்படுத்தி பதிப் பொருளாகிய மகா சங்கார ருத்திர சமட்டி ரூப சதாசிவ தான்டவேசுவரப் பெருமாளான சிவனே உலகின் முதல்வர் என உறுதிபடக் கூறுகிறது.

காணப்படுகின்ற இவ் உலகைக் கொண்டு காணப்படாத கடவுள் இருக்கிறாரென்றும் அவரில் தான் இப் பிரபஞ்சம் ஒடுங்கிப் பின் அவரிலிருந்து தோன்றுகிறது என்றும் கூறுகிறது.

உலகம் மாயையின் வசப்பட்டது. மாயை தனு கரண புவன போகங்களாகக் காட்சியளிப்பது. இவ் உலகம் காரியம். காரணத்திலிருந்தே காரியம் தோன்றும் என்பது விதி. அதன்படி காரியமாகிய இந்த உலகத்திற்கு காரணமாக உள்ளது மாயை என்று விளங்கிக் கொள்ள முடியும். மாயை,சுத்த மாயை,அசுத்த மாயை, சுத்தா சுத்த மாயை என மூன்று வகையானது.

காரணமான மாயை மூன்று வகைப்பட்டமையால் காரியமான உலகும் மூன்று வகைப்பட்டதேயாகும். இந்த மூன்று வகைப்பட்ட உலகையும் சங்கரிப்பவனான சிவனே உலகின் முழுமுதற் கடவுள் என்று கூறி பதி நிச்சயம் கொள்கிறது இச் சூத்திரம்

இதைச் சிவஞான சித்தியாரின் பின்வரும் சூத்திரங்களும் உறுதி கொள்கின்றன.

சூத்திரம் ஒன்று செய்யுள் ஒன்று அவன் என்றும், அவள் என்றும் அது என்றும் தனித்தனி வேறுபாடுகளைக் கொண்டு காணப்படும் இப் பிரபஞ்சம் உள்ளதாகிய காரணத்திலிருந்து தோன்றுதற்குரிய சங்காரிய முறையால் தோன்றி நின்று அழிவடையும் தன்மையானது. ஆதலால் அப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கக் கர்த்தா ஒருவர் தேவை. அக் கர்த்தா முன் ஒடுங்குவதற்குக் காரணமாக இருந்த சங்கார காரணனே ஆவர். அந்தச் சங்கார காரன் பிரபஞ்சம் தன்னுள் ஒடுங்கிய பின் அநாதி முத்த சித்துருவாய் நின்று மீளவும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பான். இதனால் அவனே முதற் கடவுள் என்று சொல்கிறது.

சூத்திரம் ஒன்று செய்யுள் முப்பத்து மூன்று,

"ஒரு கடவுள் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நிலை பெறச் செய்து சங்காரஞ் செய்யும் காரணத்தினால் முத்தொழிலும் இடையறாது நடைபெறுகிறது. எனினும் இவற்றைச் செய்வதால் அவன் விகாரமடைவதில்லை. இது சூரியன் தனது கதிர்கள் மூலம் சூரிய காந்தக் கல்லில் தீயை உண்டாக்குவது போலவும், தாமரையை மலரச் செய்வது போலவும் பூமியில் நீரை

உண்டாக்குவது போன்றதுமாகும். இச் செயல்களால் சூரியன் விகாரப்படுவதில்லை'' என்று கூறுகிறது.

இச் செய்யுள் பஞ்ச ராத்திரியர், பரிநாமவாதிகள் ,மாயாவாதிகள், சிவாத்துவ சைவர் ஆகியோரது சமயக் கொள்கைகளையும் வாதப் பிரதிவாதங்களையும் மறுத்து உலகத்தை அதன் காரண மாயையில் ஒடுக்கி அம் மாயைக்கு ஆதாரமான தனது சக்தியால் மீளத் தோற்றுவிக்கும் மகா சங்கார காரணனே உலகிற்கு முதற் கடவுள் என நிறுவுகிறது.

சூத்திரம் ஒன்று, செய்யுள் முப்பத்திநான்கு, சிருஷ்டி திதி,சங்காரம் ஆகிய முத்தொழில்களையும் செய்தற்குரிய தன்மை சங்கார காரனாகிய ஒருவனுக்கே உண்டு .அத்தகைய முதல்வனின் பணிப்பின் பேரிலே அவனது அருளைப் பெற்று பிரமா, விட்டுணு, உருத்திரன் ஆகியோர் முத்தொழில்களையும் செய்கிறார்கள் என்று கூறுகிறது.

சூத்திரம் ஒன்று செய்யுள் முப்பத்தைந்து , ''மகா சங்கார காலத்தில் பிரபஞ்சத்தோடு சேர்ந்த அனைத்தையும் சங்கரிக்கும் முதற் கடவுளான மகா சங்கரன் சிலவற்றை விட்டுச் சங்கரிக்க மாட்டான். எல்லாவற்றையும் சங்கரித்து விட்டுத் தான் மட்டுமே எஞ்சி நிற்பான். அதன் பின் பிரபஞ்சத்தை மீளவும் தோற்றுவித்து நிலை பெறச் செய்வான்'' என்று கூறுகிறது.

இச் செய்யுள், சிவ சமய வாதிகள், உற்பத்தி வாதிகள், அனேகசுரவாதிகள், ஆவேச வாதிகள் ஆகியோரது சமயக் கொள்கைகளையும், வாதப் பிரதிவாதங்களையும் மறுத்து மகா சங்காரகாரனின் ஏவற்படியே சிருஷ்டி திதிகளைச் செய்யும் கர்த்தாக்கள்

செயற்படுவார்கள் என்றும், அவர்களை ஏவிச் செயற்படுத்தும் மகா சங்கார காரனே உலகின் முதல்வன் என்று வலியுறுத்துகிறது.

இந்த வகையில் நாம் உபநிடதங்களை எடுத்து நோக்கினால் கேனோ உபநிடதம் பிரமம் என்ற பரம பொருள் தான் பிற தெய்வங்களை விட மிகவும் சக்தி வாய்ந்தது .மிகப் பெரியது, எல்லாத் தெய்வங்களுக்கும், மூலாதரமானது என்று கூறுகிறது

வேதகாலத் தெய்வங்களான இந்திரனும்,அக்கினியும்,வாயுவும் பிரம்மத்திடம் தோற்று அதற்கு அடங்கியிருப்பதாகவும் கேனோ உபநிடதம் குறிப்பிடுகிறது. அத்துடன் பிரம்மானாது ஹரன், ஈசன் என்று பெயர் கொண்ட சிவன் என்றும் குறிப்பிடுகிறது. பிரம்மத்தை இந்திரனுக்கு அறிமுகப்படுத்தியவர் உமா என்றும், உமாமலையரசனின் மகளென்றும் குறிப்பிடுகிறது.

அடுத்துப் புராணங்களை எடுத்து நோக்கின் புராணங்கள் பதினெட்டு. இதில் ஆறு புராணங்கள் சிவனுக்குரியவை. வேதகாலத் தெய்வங்கள் முப்பத்து மூன்றில் ஒன்று ருத்திரன். இந்த உருத்திரன் உபநிடதங்களில் ஹரன் என்றும் ஈசன் என்றும் அழைக்கப்படுகின்றான். அத்துடன் அவன் பிரமமாக வர்ணிக்கப்படுகிறான். புராணங்கள் ருத்திரனான ஹரனைச் சிவனென்று கூறி அவனே பரப் பிரமம் என்கின்றன. அத்துடன் பரப் பிரமமே மேலானவன் என்றும் கூறுகின்றன. இதை நிரூபிக்கப் பல கதைகள் கூறப்பட்டுள்ளன. இதில் ஒன்று படைத்தல் தெய்வமான பிரமாவும், காத்தல் தெய்வமான விஷ்ணுவும் தமக்குள் யார் பெரியவர் என்று வாதிட்டுப் போர் புரிய, சிவன் ஒளிப் பிழம்பாகத் தோன்றி அந்த ஒளிப் பிழம்பின்

அடியையும் முடியையும் தேடிக் கண்டு பிடிப்பவர்களே பெரியவர் என்று கூறப் பிரம்மா அன்னமாக மாறி முடியைத் தேடிச் செல்ல, விஷ்ணு பன்றியாக மாறி அடியைத் தேடிச் சென்று இருவரும் அடியையும், முடியையும் காணாது சிவன் தான் பெரியவர் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

இந்து தத்துவ தரிசனங்களில் ஒன்றான வேதாந்தம் உபநிடதங்களில் இருந்து உருவானது. வேதாந்தம், அத்வைதம் , விசிட்டாத்வைதம் ,துவைதம் என மூன்று பிரிவுகளை உடையது. விசிட்டாத்துவைதமும் ,துவைதமும் விஷ்ணு தான் பிரமத்தின் வடிவம் என்று கூற, அத்வைதம் இலிங்க வடிவினனான சிவன் தான் பரப் பிரமம் என்று கூறுகிறது.

இருக்கு வேதம் சிறப்பித்துக் கூறிய ருத்திரன் என்னும் தெய்வத்தை விட ஹரன் என்னும் தெய்வமும் சக்தி வாய்ந்தது என்று சுவேதாஸ்வர உபநிடதம் கூறுகிறது. வித்தில் எண்ணெயும். விறகில் நெருப்பும் அடங்கியிருப்பதைப் போல ஆன்மாக்கள் ஹரன் என்ற பிரமத்துள் அடங்கியுள்ளனவென்றும் இவ் உபநிடதம் கூறுகிறது. ஆன்மாக்களின் நோக்கம் ஹரனை அடைதலே. ஹரன் ஆன்மாக்களுக்கு அருகிலும், தொலைவிலும் இருக்கிறான். ஆன்மாக்கள் யோகமுறையால் ஹரனை அடையலாம். வேதங்களும் உடநிடதங்களும் ருத்திரன் என்றும் ஹரன் என்றும் கூறிய சிவனைப் பற்றியும், சிவனின் ஆற்றலைப் பற்றியும் ,சிவனின் மகிமை பற்றியும், ஆன்மாக்கள் சிவனை அடையும் முறைகளைப் பற்றியும் கூறியவற்றையே சிவஞானபோதமும் ஏனைய மெய்கண்ட சாஸ்திரநூல்களும் கூறுகின்றன.

மேற்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது

1. பிரபஞ்சம் தோன்றல்,நிலை பெறல், அழிதல் எனும் முத்தொழில்களை உடையது.
2. பிரபஞ்சம் இறைவனால் முத்தொழில்களை அடையும்.

## பிரமாணவியல்-II

## இரண்டாம் சூத்திரம்

**அவையே தானே ஆயிரு வினையின்**

**போக்கு வரவு புரிய ஆணையின்**

**நீக்க மின்றி நிற்கு மன்றே.**

அனுமானப் பிரமாணத்தால் உணரப்பட்ட முதல்வன் நிமித்த காரணன் ஆகையால், அதே பிரமாணத்தால் முதற் காரணமான மாயையும், துணைக் காரணங்களான கன்மமும் சிற்சக்தியும் உண்டென உணரப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது.

இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சிவசக்தி வடிவெடுத்து உலகைத் தோற்றுவிக்கிறான். உயிர் வேறு, உடல் வேறு எனத் தோன்றாது இரண்டும் ஒன்று போல வேறுபாடு இல்லாமல் அவ்வுடலாலே நிற்கும். அதுபோலச் சங்கார காரனனாகிய இறைவன் உயிர்களில் கலந்து நிற்கும் கலப்பில் உயிர்களென்றும் இறைவன் என்றும் வேறுபாடு இல்லாமல் அவ்வுயிர்களாகவே நிற்பன.

இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய்க் கலந்து நின்று கன்மத்திற்கேற்ப மாயையிலிருந்து பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவன்.

**நுதலிய பொருள்** பாச உண்மைக்குப் பிரமாணம்

இச் சூத்திரம் நான்கு அதிகரணங்களைக் கொண்டது.

**முதல் அதிகரணம்,**இறைவன் உயிர்களில் இரண்டறக் கலந்து நிற்பவன்.

**மேற்க்கோள்** ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும் என்றது.

இதைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் இரண்டு செய்யுள் மூன்று பின்வருமாறு சொல்கிறது.

உயிரானது, உடம்போடு உடனாய் நின்ற போதும் உயிரானது உடம்பாக மாட்டாது. அது போல உடம்பானது உயிராக மாட்டாது. எனினும் உயிர் அவ்வுடம்பில் வேறாகியும் அவ்வுடம்பாகியும் நிற்கும். இதுபோலவே இறைவன் உயிர்களோடு அபேதமாய்க் கலந்து நிற்பான். இவ்வாறு நின்ற போதும் இறைவன் இறைவனே. உயிர் உயிரே ஆகும்.இறைவன் உயிராக மாட்டான். அதுபோல இறைவன் உயிரின் வேறாகியும், உடனாயும், உயிர்கள் எல்லாமாயும் நிற்பான்.

**இரண்டாம் அதிகரணம்,**உயிர்களுக்கு கன்ம பயனை இறைவனே கொடுப்பான்.

**மேற்கோள்,** இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும் என்றது.

இதைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் இரண்டு செய்யுள் நான்கு பின்வருமாறு கூறுகிறது,

“உயிர்கள் முற்பிறவிகளில் செய்யப்பட்ட நல்வினை தீவினைகளின் பயனாக எடுத்த பிறவியில் இன்பமும் துன்பமும் உண்டாகும். இதனால் மேலும் மேலும்

இருவினைகளும் சேரும். இதனால் பல பிறப்புக்கள் ஏற்படும். இவ்வாறு உயிர்கள் எடுக்கும் பிறப்புக்களில் அவற்றிற்கு ஏற்படும் நல்வினை, தீவினைகளை இறைவனே சேர்த்து வைப்பான்.

**மூன்றாம் அதிகரணம்** உயிர்கள் அச்சு மாறியே (உடல் மாறியே) பிறக்கும்.

**மேற்க்கோள்** இனி இவ்வான்மாக்கள் (உடல்) மாறிப் பிறந்து வரும் என்றது.

இதைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் இரண்டு செய்யுள் முப்பத்தாறு பின்வருமாறு சொல்கிறது, “உடம்பு மூன்று வகைப்படும், அவை பூதவுடம்பு ,பூதசாரவுடம்பு, யாதனவுடம்பு இவை முறையே பூமி,சுவர்க்கம் ,நரகம் ஆகிய உலகங்களுக்குரியன .இவ்வுலகிற்கு வரும் போது யோனி சேரும். சிவபெருமானால் அளிக்கப்படும் துன்பங்களை இத்தூல உடம்பு நீங்கியவிடத்து உடன் போகாது நிலை பெற்றுள்ள சூக்கும உடம்பிலிருந்து வினைப் பயன்களை அனுபவிப்பதற்குரிய மூன்று வெவ்வேறு உடல்களும் தோன்றும். உயிர்கள் வினைப் பயனை அனுபவித்தற்குரிய அவ்வுடம்போடு இறைவன் அளிக்கும் இன்ப துன்பங்களை அனுபவிக்கும். பின்பு எஞ்சும் சஞ்சித வினைப் பயனை அனுபவிக்கக் கர்ப்பத்தில் சேரும்.

இதையே சிவஞான சித்தியாரின் சூத்திரம் இரண்டு, செய்யுள் நாற்பத்தொன்றும் கூறுகிறது. “அவரவர் வினைகளுக்கேற்பச் சங்கமம் தாபரமாகிய உயிர்கள் உடலைப் பிரிந்து பின் அவ்வவ் பிறவியில் மாறிப் பிறப்பதில்லை என்றால், இவ்வுலகில் மனிதப்

பிறவியெடுத்தவர்கள் செய்யும் புண்ணியத்தின் பலன்களை மேலுலகில் வாழுகின்ற தேவர்களாய் அனுபவித்தலேயன்றி மானிடர்களாய் அனுபவிப்பதுண்டோ..''

இதே கருத்தைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் இரண்டு .செய்யுள் நாற்பத்திரண்டும் கூறுகிறது.

''சுவர்க்க இன்பமான தேவபோகத்தைத் தேவருலகில் மானிட வடிவம் கொண்டே அனுபவிப்பர் என்றால், அது தேவலோகமாகாது, மண்ணுலகமாகவே இருக்கும். மண்ணுலக மாந்தர் தேவர்களாகிச் சுவர்க்க இன்பத்தைத் தேவ உலகில் அனுபவிப்பர் என்றால், உடல் மாறுதலடைவதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும் .தேவ இன்பத்தை அனுபவித்து முடித்த பின்பு, மண்ணுலகில் பிறக்கும் போது மனிதர்களாகவே பிறப்பர். அவர்கள் தேவர்களாகார்.

இதே கருத்தைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் இரண்டு ,செய்யுள் நாற்பத்து மூன்றும் கூறுகிறது. மனிதவுடல் தேவ உடலாய் மாறுபாடடைந்தாலும் உறுப்புக்கள் மாறுபாடடைவதில்லை. இதனால் முற்றும் மாறுபாடடையும் என்பது பொருந்தாது . மயிர்க்குட்டி வண்டாகவும், புழுகு குளவியாகிய வேட்டுவனாகவும் உடல் மாறும் என்பதும், அப்படி மாறும் போது அதற்குரிய உறுப்புக்கள் வேறு வேறு என்பதும் பிரத்தியட்சம் .ஆதலால் கன்மத்திற்கேற்ப உடல்கள் மாறும் என்பது எல்லாச் சமய நூல்களின் முடிபு ஆகும். பிரத்தியட்சம் பிரமாணத்தோடும் மாறுபட்டு முற்றும் மாறுவதில்லை என்று கூறுவது போலியான கூற்று

இது பற்றிச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் இரண்டு செய்யுள் நாற்பத்தாறு பின்வருமாறு கூறுகிறது. “உயிர் ஒருடல் எடுத்து அதுவாய் நிற்பதேயன்றி பிறிதொன்றினை எவ்வாறு எடுக்கும் என்றால், வினைகள் சடம். அதனால் வினைகள் தானாகச் சென்று உடல்களை அடைய மாட்டாது. உயிர்கள் அறிவுடையவை. அதனால் தமக்கு வரும் துன்பமான வினைகளையும் அறிந்து விலக்கி விடுவதால் அவற்றை அவை அனுபவிக்க மாட்டாது. இதனால் மாயையினையும், வினைகளையும் ஒடுங்குபடுத்தி உயிர்களுடன் சேர்த்து வைப்பது இறைவனது பணியெனப் பரிசேட அளவையாற் பெறப்பட்டது. அதனால் இறைவன் படைத்த எவ்வகை உடலையும் உயிர்கள் தத்தம் வினைக்கேற்ப பெற்றுக் கொள்ளச் செய்வான்”

**நான்காம் அதிகரணம்,**இறைவன் சர்வ வியாபகன்,

**மேற்கோள்,**இனி நீக்கமின்றி நிற்குமன்றே என்றது

சிவபெருமான் பிரபஞ்சத்தைத் தோற்றஞ் செய்யும் போது உயிர்களிடத்தில் உடலும், உயிரும் போல ஒன்றாயும், பொருளின் தன்மையால் கண்ணும் சூரியனும் போல அவ்வுயிர்களின் வேறுமாய், உயிர்களுக்கு உயிராதல் தன்மையால் கண்ணொளியும் ஆன்ம போதமும் போல அவ்வுயிர்களோடு உடனுமாய், அவ்வவ் உயிர்களிடத்து மேலாய் நிற்பதாகிய சக்தி ரூபமாயும், அச் சக்தியினால் கூட்டுவிக்கின்ற இரு வினைகளுக்கேற்ப எண்ணிறைந்த அவ்வுயிர்கள் ஐந்தொழிற்பட்டுச் செல்லும் போது அவ் ஐந் தொழில் நடத்தும் பதி ரூபமாகியும், சக்தி ரூபம், பதி ரூபம்

ஆகிய அத் தன்மைகளின் வேறாயும், அத் தன்மைகளோடு பிரிவின்றியும், எவ்விடத்திலும் தானே சுயம் பிரகாசமாயும் இறைவன் நிற்பான்.

இரண்டாவது சூத்திரம் பேதவாதி, அபேதவாதி ,பேதாபேதவாதி ஆகியோரின் கொள்கைகளை மறுத்து சங்கார காரணனான சிவன் உயிர்களுடன் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையை விளக்குகிறது. அத்துடன் நையாயிகர் மீமாஞ்சர் ஆகியோரின் கொள்கையை மறுத்து இறைவன் சர்வ வியாபியனாய்த் தனது ஆணையாகிய சிற்சக்தியோடு நீக்கமின்றி சம வேதமாய் நிற்பான் என வலியுறுத்துகிறது.

மேற்ச்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது-

1. இறைவன் ஆன்மாக்களுடன் இரண்டறக் கலந்து நிற்பான்
2. இறைவனே கன்ம பலனைக் கொடுப்பான்.
3. கன்மங்களுக்கேற்ப ஆன்மாக்களுக்கு உடம்பை இறைவன் கொடுப்பான்.
4. இறைவன் சர்வ வியாபகன்.

## பிரமாணவியல் -III

## மூன்றாம் சூத்திரம்

**உளதில தென்றலின் எனதுடல் என்றலின்**

**ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்**

**உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்**

**மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.**

மாயையிலிருந்து இறைவன் உலகத்தைத் தோற்றுவிக்கிறானென்று முன்பு அனுமானப் பிரமாணத்தால் பெறப்பட்டது. இச் சூத்திரத்தில் அதே பிரமாணத்தால் இறைவன் ,மாயை என்னும் இரண்டிற்கும் வேறாக உலக காரியங்களை (இன்ப துன்பங்களை) அனுபவிக்க ஆன்மா என்ற ஒன்று உண்டெனக் கூறப்படுகிறது.

உலகைக் கொண்டு முதல்வனாகிய சிவபெருமான் உளர் என்று நிறுவியது போல, உடலைக் கொண்டு ஆன்மா ஒன்று உளது என்று நிறுவப்படுகிறது.

ஆன்மா இல்லை என்று சொல்வதால் ஆன்மா உள்ளது. எனது உடம்பு என்று சொல்வதால் உடம்புக்கு வேறாக ஆன்மா உள்ளது. சத்தம் முதலியவற்றை ஐம்புலன்கள் வேறாக அறிவதால் அவற்றிற்கு வேறாக ஆன்மா உள்ளது. ஐம்புலன்களும் சொப்பனத்தில் ஒடுங்கி சூக்கும தேகம் பெற்ற

நிலையில் நிகழ்ந்தவற்றை அறிவதால் ஆன்மா உள்ளது துயிலும் போதும், விழிப்பு நிலையிலும் பிராணவாயு ஒரே தன்மையாய்த் தொழிற்படும் ஐம்புலன்கள் உறக்கத்தில் ஒடுக்கி விடுவதால்,அந்நிலையில் பிராணவாயு அவற்றை தொழிற்படுத்தவும், ஒடுக்கவும் சக்தியற்றது. அதனால் பிராணவாயுவுக்கு வேறாக ஆன்மா உள்ளது.ஆன்மா அறிவிக்க அறிவது. ஆனால் பிரமம் அறிவிக்காமல் அறிந்து கொள்ளும் முற்றறிவுடைய பொருள். அதனால் பிரமத்திற்கு வேறாக ஆன்மா உள்ளது.உடம்பின் தத்துவங்கள் எல்லாம் கூடி ஒன்றுபட்டு நின்றாலும் அது தானாக இயங்காது. தத்துவங்கள் சடப் பொருளாகையால் உடலை இயக்கும் ஆன்மா உள்ளது.

**நுதலிய பொருள்** ,பசு உண்மைக்கும் பிரமாணம் கூறுகிறது.

இச் சூத்திரம் ஏழு அதிகரணங்களை உடையது.

**முதலாம் அதிகரணம்,** இல்லையென்று அறிவுடனே செல்லுகையினாலே அறிவான உயிருண்டு.

**மேற்கோள்** இனி ஈண்டு இலது என்றலின் ஆன்மா உளது என்றது.

சூரியான்மவாதிகள் மாத்தியமியர் என்போரை மறுத்து உயிருண்மையைச் சாதித்தது.

**இரண்டாம் அதிகரணம்**-எனது உடல் என்று பொருட் பிறிதின் கிழமையைச் சொல்லுகையினாலே உடலுக்கு வேறாக உயிர் உண்டு.

**மேற்கோள்**-இனி எனது உடல் என்றாயின் ஆன்மா உளது என்றது.

இதைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் மூன்று, செய்யுள் இரண்டு பின்வருமாறு கூறுகிறது.ஏழு வகையான ஏதுக்களால் உடம்பிற்கு வேறாக உயிர் உள்ளது என்று சாதிக்கப்பட்ட பின்பும், அறியுந் தன்மை உடம்புக்கும் காணப்படுவதால் அவ்வுடம்பு தான் உயிர் என்று கூறுவது பொருந்தாது. அவ்வாறு உடம்பு அறிந்து கொள்ளுமானால், உடம்பு பிணமான பின்பும் அறிந்து கொள்ளல் வேண்டும். அப்படி உடம்பு அறியாதவிடத்து உடம்பை உயிரென்று எப்படிக் கொள்வது? பிராண வாயு தான் உயிர். நீங்கிய பின் உடல் எவ்வாறு இயங்கும் என்பாருக்கு அழுத்தியில் (கனவு நிலையில்) பிராண வாயுவும் உடம்பும் இருத்தலால் உணர்வு நிகழ வேண்டும். அப்போது உணர்வு நிகழாதிருக்கிறது. அதனால் உடம்பில் உயிர் உள்ளதே உண்மை.

இந்த அதிகரணம் தேகான்மவாதியை மறுத்து உயிர் உண்மையை வலியுறுத்துகிறது.

**மூன்றாம் அதிகரணம்** -ஐந்தையும் ஒருவனே அறிதலின் ஒவ்வொன்றை மாத்திரம் அறிகின்ற ஐந்திற்கும் வேறாக உயிர் உண்டு.

**மேற்க்கோள்**-இனி ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது என்றது.

இதைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் மூன்று செய்யுள் மூன்று பின்வருமாறு கூறுகிறது.

“ஐம்பொறிகள் அறிவித்தாலன்றி உடம்பு அறிந்து கொள்ள மாட்டாது.. இந் நிலையில் உடம்பு அழியும்

போது ஐம்பொறிகளினதும் செயற்பாடுகளும் அழிந்து போய் விடும். இவ் ஐம்பொறிகள் நனவு நிலையில் அறிந்து கொள்ளும். அதுபோல உறக்கத்தில் அறிந்து கொள்ள மாட்டாது. ஆதலால் ஐம்பொறிகள் தான் உயிரென்றால், நனவு நிலை போல உறக்கத்திலும் அறிதல் வேண்டும். நனவு நிலையிலும் , ஒவ்வொரு பொறியும் தத்தமக்குரிய வற்றைத் தவிர வேறெதையும் அறியாதும் அத்துடன் ஒவ்வொரு பொருளாக அறிவதன்றி எல்லாப் பொருட்களையும் ஒன்றாக அறிய மாட்டாது. உதாரணமாக காது பார்க்க மாட்டாது. ஆனால் இவ் ஐந்து இந்திரியங்களையுங் கொண்டு ஐந்து விடயங்களையும் அறியும் பொருள் உடலுள் உண்டு. அதுதான் உயிர்''

இந்திரிய ஆன்மவாதியை மறுத்து உயிருண்மையை இச் செய்யுள் வலியுறுத்துகிறது.

**நான்காம் அதிகரணம்-**கனவுலகைவிட்டு நனவுடலிலே வருகையினாலே அக் கனவுடலுக்கு வேறாக உயிர் உண்டு.

**மேற்கோள்-** இனி ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது என்றது.

இவ் அதிகரணம் சூக்கும தேகான்மவாதியை மறுத்து உயிர் உண்மையைச் சாதித்தது.

**ஐந்தாம் அதிகரணம்-**நித்திரையிலும் பிராண வாயுத் தொழில் பண்ணவும், சரீரத்திற்குப் புசிப்பும் தொழிலும் இல்லாதபடியினாலேயே பிராண வாயுவுக்கு வேறாக உயிர் உண்டு.

**மேற்கோள்.** இனி, கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா உளதென்பது.

இந்த அதிகரணம் பற்றிச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் மூன்று செய்யுள் நான்கு பின்வருமாறு கூறுகிறது.

‘‘ஐம்பொறிகளையும் இயக்குவது பிராணவாயு. இதனால் பிராணவாயுவே உயிரென்று கூறும் பிராணான்மவாதிகளின் கூற்றை இச் செய்யுள் மறுத்துரைக்கிறது. உறக்க நிலையில் ஐம்பொறிகளும் உணர்விழந்திருக்கும் போதும், பிராணவாயு உடலில் உள்ளது. அப்படியானால் நனவு நிலையில் பிராணவாயு இருக்கும் போது உணர்ந்து கொள்ளும் ஐம்பொறிகள் உறக்க நிலையில் உணர்ந்து கொள்ளாமையினால் பிராணவாயுவுக்கு வேறாக உயிர் உளது.

இச் செய்யுள் பிராண்மவாதியை மறுத்துப் பிராண வாயுவுக்கு வேறாக உயிருண்டு என வலியுறுத்தியது.

**ஆறாம் அதிகரணம்,** மறந்து மறந்து நினைக்கின்ற படியினாலே மறவாமல் இருக்கின்ற அரனுக்கு வேறாக உயிருண்டு.

**மேற்கோள்,**இனி உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்றது.

இந்த அதிகரணத்தைப் பற்றிச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஒன்பது செய்யுள் இரண்டு பின்வருமாறு கூறுகிறது.

‘‘கருவிகளிலிருந்து (மலங்கள்) நீங்கிய ஆன்மாவைச் சிவனோடு சமமாக வைக்க முடியாது.இவ் ஆன்மா தூல சூக்கும காரண வேதங்களால் கட்டுண்டு , நூல் உணர்வால் உணர்த்த உணர்ந்து ஒவ்வோர்

இந்திரியங்கள் உணர்த்த ஒவ்வொரு விடயங்களையும் உணர்ந்து இருக்கும் வேளையில் சிவஞானத்தால் மலங்கள் நீக்கப்படும் போது ஆதி முத்தன் எனப் பெயர் பெறும். சிவன் ஒருவன் உணர்த்தலின்றித் தானே முழுவதும் அறிந்து, அநாதியே பாசத்தடை நீங்கிய பேரறிவாளன் ஆதலால் அநாதி முத்தன் எனப்படுபவன் .ஆதலால் ஆதிமுத்தனாகிய பசுவை அநாதி முத்தனாகிய பதியோடு ஒப்பிடமுடியாது.

இவ்வதிகரணம் விஞ்ஞான ஆன்மவாதிகளாகிய மாயாவாதிகளை மறுத்து உயிருண்மையை நிறுவுகிறது.

**ஏழாம் அதிகரணம்** ,எல்லாத் தத்துவங்களுக்கும் வெவ்வேறு பெயர் இருக்கின்ற படியால் அந்தந்த தத்துவங்களுக்கு வேறாய் உயிருண்டு.

**மேற்கோள்,**இனி மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது என்றது.

இவ் அதிகரணம்,சமூகான்ம வாதியை மறுத்து உயிருண்மையை நிறுவியது.

சமூகான்மவாதிகள் கலை முதல் நிலம் இறுதியாகவுள்ள தத்துவங்களும் ,அவற்றின் மாயா காரியங்களான உருவம் ,வேதனை,விஞ்ஞானம் ,குறிப்பு, பாவனை முதலிய பஞ்ச கந்தங்களும் சேர்ந்த கூட்டமே ஆன்மா என்பர். இவற்றில் ஒன்று குறைந்தாலும் அறிவாகாது.ஆகையால் இவற்றின் சமுதாயமே ஆன்மாவாகும். தத்துவங்கள் அறிவற்ற சடப் பொருள்கள். இவற்றிற்குத் தனித்தனியாக வெவ்வேறு பெயர்களுண்டு.இவை ஆன்மா, சிவத்தை அடைய உதவுமே தவிர ஆன்மாவாகா. இந்திரியங்களும் மற்றும் சித்தம் பிராணன் முதலிய

கருவிகளும் தொழிற்படாத துரியாதீத நிலையின் போதும் அறிவு நிகழ்வதால் தத்துவக் கட்டடங்களே ஆன்மா என்பது பொருந்தாது.

மேற்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது.

1. ஆன்மா இல்லை கூறும் அறிவே ஆன்மாவாகும்.
2. எனது தேகம் என்பதால் எனது வேறு, தேகம் வேறு. எனது என்று கூறப்படும் நானே ஆன்மா.
3. ஐம்புல விடயங்களை ஒருங்கே அறிவதே ஆன்மா.
4. சூக்கும தேகம் ஒரே தன்மையாகத் தொழிற்படினும் ,கனவு விழிப்பு நிலைகளில் அறிவு மாறுபட்டிக்கிறது. இதனால் அவற்றிற்கு வேறாக ஆன்மா உண்டு.
5. உறக்க நிலையில் இன்ப துன்ப உணர்வுகள் இல்லை. இரண்டு நிலையிலும் பிராண வாயு சம்பந்தப்பட்டிருக்கிறது. எனவே பிராண வாயுவுக்கு வேறாக ஆன்மா உள்ளது.
6. முற்றறிவுடைய பதியை அடைந்த ஆன்மா பதியாகாது.

## 2) இலக்கணவியல்

### நான்காம் சூத்திரம்

**அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை**
**சந்தித்த நான்மார் சகசமலத் துணரா (து)**
**அமைச்சா சேய்ப்ப நின் றஞ்சவத் தைத்தே**

ஆன்மா அந்தக் கரணங்களான மனம், புத்தி, சித்தம் ,அகங்காரம் என்னும் உட்கருவிகள் நான்கினுள் ஒன்றல்ல. அது அநாதியிலிருந்து சகச மலம் என்று சொல்லப்படுகின்ற ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது.அரசனுக்கு மந்திரிமார் உதவுவது போன்று ஆன்மா அந்தக் கரணங்களோடு கூடி நின்று விடயங்களை அறிந்து கொள்ளும்.

அந்தக் கரணங்களாகிய கருவிகள் ஆன்மாவுக்கு விடயங்களை அறிய உதவுகின்றன. ஆன்மா அந்தக் கரணங்களின் உதவியுடன் ஏனைய தத்துவங்களோடு கூடியும் கூடாமலும் நின்றும் விடயங்களை அறிந்து வருகிறது. அதனால், அது சாக்கிரம்,சொப்பணம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்றும் ஐவகை அவத்தை நிலைகளில் முறையே தூல உடம்பு, சூக்கும உடம்பு, புரியட்டக உடம்பு, கஞ்சுக உடம்பு, காரண உடம்பு, என்னும் ஐந்து உடம்புகளில் பொருந்தி நின்று விடயங்களை அறியும்.

முதலாவது சூத்திரத்தில் பதி மேலானவர் என்றும், இரண்டாம் சூத்திரத்தில் பாசம் உண்டு என்றும், மூன்றாம் சூத்திரத்தில் எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மா என்ற ஒன்று உண்டென்றும் உறுதி

செய்யப்பட்டது.நான்காவது சூத்திரத்தில் பதி,பாசம்,பசு என்பவற்றிற்கு இலக்கணம் கூறுகிறது.

**நுதலிய பொருள் -**பசு இலக்கணம் கூறுகிறது.

இச் சூத்திரம் மூன்று அதிகரணங்களை உடையது.

**முதல் அதிகரணம்-**அந்தக் கரணங்களுக்கு உயிர் உட்கூடினாலன்றித் தொழிலில்லாத படியினாலே அந்தக் கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

**மேற்கோள்-**ஈண்டு இவ் ஆன்மாவானது அந்தக் கரணங்களாயுள்ள மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.

இந்த அதிகரணத்தைப் பற்றிச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் நான்கு, செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

''அந்தக் கரணங்களும் ஐம்பொறி போல ஒன்றினை ஒன்று உணராது. ஆதலால் அந்தக் கரணம் நான்கினையும் கொண்டு அறியும் உயிர் அவற்றிற்கு வேறானது. அத்துடன் ஆணவ மலம் உயிரோடு அநாதியிலிருந்து கலந்து நிற்பதால் உயிர் தனக்கென்று ஓரறிவும் இன்றி இவ் அந்தக் கரணங்களாலாய நான்கு தொழில்களையும் இவற்றோடு கூடி அறியும். இவ்வாறு அறிந்து கொள்ளும் ஆன்மா சொப்பனாவத்தையில் இவ் அந்தக் கரணங்களை அடக்கி உட் கருவிகளாக்கி அகத்தே நிகழ்வதை அறியும். இதுபோல சாக்கிராவத்தையில் இவ்வந்தக் கரணங்களைப் புறக் கருவிகளோடு சேர்த்துப் புறக் கருவிகளாக்கிப் புறத்தே நிகழ்வதையும் அறியும். இவ்வாறு அகத்தும் புறத்தும் சேர்ந்து அறிவதால்

சாக்கிரம், சொப்பணம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளையும் ஆன்மா பொருந்தும்’’

**இரண்டாம் அதிகரணம்-**மல மறைப்பால் உயிருக்கு அறிவில்லை.

**மேற்கோள்-**இனி இவ் ஆன்மா சகச மலத்தினால் உணர்வின்று என்பது.

இவ் அதிகரணத்தைப் பற்றிச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் நான்கு செய்யுள் இருபது பின்வருமாறு கூறுகிறது.

‘‘இறைவன் பூரண அறிவும், சார்ந்த பொருளோடு சாராது நிற்கும் தன்மையும் உள்ளவன். ஆனால் ஆன்மா அநாதியிலிருந்து ஆணவ மலம் சேர்ந்தமையால் அறிவில்லாதது, வியாபகமில்லாதது, சார்ந்த பொருளோடு சார்ந்தது, அப்பொருளாய் நிற்கும் தன்மையுடையதாதலால் இச்சா ஞானக் கிரியா என்னும் குணங்களை உடையது. அப்படியிருந்த போதும் அவ் இச்சா ஞானக் கிரியைகளை அநாதியிலிருந்து பற்றியிருக்கும் ஆணவ மலம் தொழிற்படாமல் மறைத்து வைத்திருக்கும். இதனால் ஆன்மா தூல சித்தாய் நிற்கும். இவ்வாறு கட்டுப்பட்டு நிற்பதால் பசு எனப்படும்.

**மூன்றாம் அதிகரணம்** -உயிர் மூன்று அவத்தைப்படும்.

**மேற்கோள்,**இனி இவ்வான்மா சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி,துரியம், துரியாதீனம் என்ற பஞ்சாவத்திதனாய் நிற்கும்.

இந்த அதிகரணத்தைப் பற்றிச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் நான்கு செய்யுள் முப்பத்தேழு பின்வருமாறு கூறுகிறது.

“காரிய அவத்தைகளாகிய கேவல, சகச,சுத்தம் என்னும் மூன்று அவத்தைகளை ஆன்மா பெறும் போது கேவலம் சகலம் சுத்தம் என மூன்று காரண அவத்தையைப் பொருத்துதல் வேண்டும்.கேவலமானது, இச்சா ஞானக் கிரியைகளை சிறிதும் தொழிற்படாது தான் மாத்திரையாய் ஆணவ மலத்தோடு கூடி நிற்றல். சகலமென்பது, ஆணவ மலத்தோடு கூடி நிற்கும் ஆன்மா பின்பு தனு கரணாதிகளோடு இறைவன் கூட்டக் கூடி இச்சா ஞானக் கிரியைகளை விளங்கி நிற்றல். சுத்தமாவது, தனு, கரணாதிகளுடன் கூடி நின்ற ஆன்மா ஆணவம் முதலிய பஞ்ச மலங்களை நீக்கி ,அம் மலங்கள் நீங்கியமையால் பிறவியை ஒழித்து இறைவனான சிவத்தோடு கூடிச் சுத்தமுடையவராய் நிற்றல்.

இந்த அதிகரணத்தைப் பற்றிச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் நான்கு, செய்யுள் முப்பத்தெட்டு பின்வருமாறு கூறுகிறது,

“காரண அவத்தை மூன்றினுள், கேவல அவத்தையில் ஆன்மா, உடம்பின்றியும் ,கலை முதலிய தத்துவங்களோடு கூடி அறிதல் இன்றியும்,புத்தியின் குணமாகிய தருமம்,ஞானம்,வைராக்கியம் ,ஐசுவரியம், அதருமம், அஞ்ஞானம், அவைராக்கியம் ,அனைசுவரியம் ஆகிய எட்டுமின்றியும்,மனம் முதலிய கருவிகள் இன்றியும், இச்சையின்றியும், அறிவின்றியும் ,தொழிலின்றியும், தனக்கெனச் சுதந்திரமின்றியும், போகத்தில்

ஈடுபாடின்றியும், சரீரத் தோற்றக் கேடுகளின்றியும், சரீரமின்மையால் ஏகதேசியாயின்றியும் ஆணவ மலத்தோடு அம்மல மாத்திரையாய் வியாபித்து நிற்கும்:

இந்த அதிகரணத்தைப் பற்றிச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் நான்கு செய்யுள் முப்பத்தொன்பது பின்வருமாறு கூறுகிறது.

“சகலாவத்தையில் ஆன்மா, உடம்பினைப் பெற்றுப் போக காண்டமாகிய கலாதி தத்துவங்களோடு கூடியும், போக்கிய காண்டமாகிய தருமம் முதலிய புத்தி குணங்களைப் பொருத்தியும், மனம் முதலிய கருவிகளைக் கூடியும், இச்சையுற்றும், வாக்குகளால் நிகழும் அறிவுற்றும், செயல்களைப் பொருத்தியும்,சத்தாதி விடயத்தில் விருப்பங் கொண்டும் ,போகத்தை அனுபவித்தும் ,பிறப்பு இறப்புகளில் புகுந்து திரிந்தும் , ஏகதேசியாகியும் நின்று சீவிக்கும்”

இந்த அதிகரணத்தைப் பற்றிச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் நான்கு செய்யுள் நாற்பது பின்வருமாறு கூறுகிறது.

சுத்த அவத்தையில் ஆன்மா, சகலாவத்தையின் நின்ற அந்த நிலையை விட்டு, இருவினையொப்பு நிலையடைந்து, சிவசக்தி பதியைப் பெறுவதால் குருவருள் பெற்று, ஞான யோகத்தில்,பொருந்தி ,மும் மலங்களையும் நீக்கி ,விடய அனுபவத்திற்கு ஏதுவாகிய விருப்பு வெறுப்புக்களை நீக்கி, சிவஞானத்தைப் பெற்று திருவருளை அடைந்து நிற்கும்,

மூன்றாவது அதிகரணம் கேவல அவத்தை ,சகலவத்தை சுத்தவத்தையின் இயல்புகளைப் பற்றி விரிவாகக் கூறுகிறது.

மேற்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது

1. ஆன்மா மனம், புத்தி,சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களுக்கு வேறானது.
2. ஆணவ மலம் ஆன்மாவின் அறிவை மறைத்துள்ளது.
3. ஆன்மா ஐந்து அவத்தைக்குட்பட்டு அறியும்.

## ஐந்தாம் சூத்திரம்

**விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்(கு)**
**அளத்தறிந் தறியா ஆங்கவை போலத்**
**தாந்தம் உணர்வின் தமியருள்**
**காந்தம் கண்ட பசாசத் தவையே.**

ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன தத்தம் விடயங்களாகிய பரிசம் ,இரசம், உருவம், கந்தம், சத்தம், முதலியவற்றை ஆன்மாவின் துணையுடன் அறிந்து கொள்ளுமே தவிர ஆன்மாவை அறியமாட்டாது. இதுபோல ஆன்மாவானது சகலாவத்தையில் நின்று வினைப் பயனை அனுபவிக்கும் போது ,அவ் வினைப் பயனை அனுபவிக்கச் செய்யும் திரோதான சக்தியையும் ஆன்மா அறிய மாட்டாது. ஆனால் ஆன்மாக்கள் அவ்வாறு உணர்ந்து கொண்டால் காந்தத்தைக் கண்ட இரும்பு போலச் செயற்படும்.

இதைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் ஐந்து செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

ஆன்மாவின் உதவியினால் இந்திரியம் அந்தக் கரணம் முதலியன தத்தம் விடயங்களிற்கென்று இ்.து இன்னதென்று அளவிட்டு அறியும். இவ்வாறு அறிந்து அறிவிப்பதோடு ,தம்மோடு உடனாய் நின்று செயற்படும்

ஆன்மாவை இந்திரியமும் அந்தக் கரணங்களும் அறிந்து கொள்ள மாட்டாது. இது போல எங்கும் வியாபகமாக இருக்கின்ற இறைவனது சிற்சக்தியின் அம்சமான திரோதான சக்தியானது ஆன்மாவுடன் நின்று, ஆன்மாக்களின் வினைப்பயன்களை அறிந்து அனுபவிக்கும்படி செய்த போதும் தம்மை வினைப்பயனை அனுபவிக்கச் செய்த திரோதான சக்தியை ஆன்மாக்கள் அறியமாட்டா. ஐம்பொறிகள் ஆன்மாவை அறியாத போதும், ஆன்மா ஐம்பொறிகளை அறிந்து செயற்படுவது போல ஆன்மாக்கள் இறைவனை அறியாத போதும், பாச நீக்கத்தில் தன்னை அறியும்படி செய்பவனாகிய இறைவன், அவ்வான்மாக்களை அறிந்தும், அறிவித்தும் அவற்றுடன் நிற்பான்.

இதைச் சிவப்பிரகாசம் என்ற நூலின் அறுபத்தேழாவது செய்யுள் பின்வருமாறு கூறுகிறது.

அறியத் தகுந்த மனம் முதலிய கருவிகளையும் ,இந்திரியங்களையும் ஆன்மா எப்பொழுதும் அறிந்து கொள்ளும். அவை தாமே தனித்து நின்று எதையும் அறிந்து கொள்ள முடியாதன. அத்துடன் ஆன்மா மூலம் தான் தாம் அனைத்தையும் அறிந்து கொள்கிறோம் என்பதையும் அவை அறிந்து கொள்ள மாட்டா. இது போலவே ,ஆன்மாவும் சிவஞானத்தின் மூலம் எல்லாவற்றையும் அறிந்து அனுபவித்த போதும் , சிவனால் தான் நாம் அனைத்தையும் அறிந்து அனுபவிக்கிறோம் என்பதை ஆன்மாக்கள் உணருவதில்லை. ஆன்மா கன்மங்களை அறிந்து அனுபவிக்க மாட்டாது. இக் கன்மங்களை அறிந்து ஆன்மாவை அனுபவிக்க வைப்பது முதல்வனான சிவபெருமானே.

**நுதலிய பொருள்,**பாச இலக்கணம், பாசமாவது ,ஆவணம், கன்மம், மாயை, மயேயம், திரோதான சக்தி என ஐந்து அவற்றுள் திரோதான சக்தியென்பது மறைத்தலைச் செய்விக்கும் சக்தி. இதனாலேயே ஏனைய நான்கு மலங்களும் காரியப்படும். திரோதான சக்தி என்பது ஆன்மாக்குள் மறைந்து நின்று கன்மத்திற்கேற்ப அறிவிக்கும் சிவசக்தி. பந்தமுறுத்தலால் சிவசக்தி பாசம் எனப்பட்டது. பந்த நீக்கத்தில் இதுவே அருளாகும்.

இச் சூத்திரம் இரண்டு அதிகரணங்களைக் கொண்டது..

**முதல் அதிகரணம்,** உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில் செய்யும்.

**மேற்கோள்,**ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது.

மாயா காரியமான தத்துவங்களெல்லாம் சடமாதலின், பஞ்சேந்திரியங்கள் ஆன்மாவால் தொழிற்படும் என்று கூறிச் சாங்கியரை மறுத்தது.

**இரண்டாம் அதிகரணம்** ,அரனாலே உயிர்கள் எல்லாம் அறியும்.

**மேற்கோள்,** இனி இதுவும் தமது முதலாலே உணரும் என்றது.

இந்த அதிகரணத்தைப் பற்றி சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஐந்து, செய்யுள் நான்கு இவ்வாறு கூறுகிறது.

ஆன்மா அறிவதற்கு மாயா காரியங்களாகிய தத்துவங்களே உதவும். இறைவனின் அருளால் ஆன்மாவினால் உணரப்படும் ஆன்ம தத்துவம் புறக் கருவிகளாகிய தாத்துவிகமும் அறிவு முதலியவற்றை

விளக்குவனவாகிய கலை, வித்தை முதலிய தத்துவங்களும் கன்ம பலனை வரையறை செய்யும் காலம், நியதி முதலிய தத்துவங்களும், தூலவுடம்பும் நூல்களுக்கு காரணமாகிய நால்வகை வாக்குக்களும் பொருந்தும் படி இறைவன் கூட்டி உணர்த்தினால் தான் ஆன்மா உணரும். அவைகளைக் கூட்டாத அநாதி கேவலத்தில் உயிர் மலத்துடன் கூடி இறைவனை உணராது நிற்கும். மாயா காரியங்கள் ஆன்மா அறிவதற்குத் துணையாக இருந்தவிடத்தும் தாமாக ஆன்மாவுடன் கூடாது. மாயா காரியங்கள் இல்லாத கேவல நிலையில் அறிவு நிகழாமையால் உயிர் தானாக அவற்றை அறிந்து எடுத்துக் கொள்ளாது. ஆதலால் அவற்றை ஆன்மாவுடன் சேர்த்து விட ஒரு இறைவன் தேவை. இறைவன் இன்றி ஆன்மாக்களுடன் மயாகாரியங்கள் சேராது.

இதே கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஐந்து செய்யுள் ஐந்து பின்வருமாறு சொல்கிறது.

‘‘சித்துப் பொருளான ஆன்மா, தன்னின் வேறான இறைவன் அறிவிக்க அறிதல் போல, இறைவன் அறிவிக்க ஆளில்லாதவன் .இறைவனுக்கு அறிவிக்க ஆளிருப்பின் இறைவனுக்கும் அறிவித்தவர்களுக்கும் அறிவிக்க ஆட்கள் தேவை. இவ்வாறு அறிவிக்க ஆளில்லாத இறைவன் தானே முதல்வனாய் உயிர்களின் பொருட்டுக் கேவலாவத்தையில் அறிதல் வகையில் சூக்கும ஐந்தொழிலையும் ,சகலாவத்தையில் விடயத்தைத் தோற்றுவிப்பதற்காக சிருஷ்டி முதலிய தூல ஐந்தொழில்களையும் அச் சகலாவத்தையினுள் சாக்கிரத்தில் இன்ப துன்பப் பலனை ஊட்டுவிக்கும் முறையில் அதிசூக்கும ஐந்தொழிலையும் செய்து நிற்பான்.

இதைச் சிவப்பிரகாசம் என்ற நூலின் அறுபத்து நான்காவது செய்யுள் பின்வருமாறு கூறுகிறது.

“ஆன்மாவின் உதவியுடன் ஐம்பொறிகள் விடயங்களை உணர்ந்து கொள்வது போல, ஆன்மா இறைவனின் உதவியுடன் ஐயுணர்வுகளை உணரும். இதன் மூலம் ஈசுர அவிகாரவாதிகளை மறுத்துரைக்கிறது.

மேற்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது-

1. ஆன்மாவே ஐம்பொறிகளையும் இயக்குகிறது.
2. இறைவனால் ஆன்மா அறிந்து கொள்ளும் .

## ஆறாம் சூத்திரம்

**உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்**

**இருதிறன் அல்லது சிவசத் தாமென**

**இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.**

இறைவனான சிவன் அறிந்து கொள்ளக் கூடிய பிரபஞ்சத்தைப் போன்றவராயின் அவரும் அறியப்படுகின்ற பிரபஞ்சத்தைப் போல அசத்தானவராவார். அது போல ஒரு வகையாலும் அறியக் கூடாதவராயின் அவர் சூனியப் பொருளாகி விடுவார். ஆதலின் இறைவன் மேற்சொல்லப்பட்ட இரு பகுதியுமின்றி ,அதாவது ஒருவற்றான் அறியப்படாமையும் ஒருவற்றான் அறியப்படுதலுமாகிய இரண்டு வகையும் சேர்ந்த சிவசத்தென்று மெய்யுணர்வுடையோர் கூறுவர்.

இக் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஆறு செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது. ஆன்மாக்களுக்கு அறிவித்தலைச் செய்யும் சிவபெருமான் மனதால் எண்ணி கண்ணால் அறியப்படும் பொருளா? அல்லது எவ்வகையாலும் அறியப்படாத பொருளா? எனின், மனதில் உருவஞ் செய்து கண்ணால் அறியப்படும் பொருளாயின், மனதால் எண்ணி கண்ணால் காணும் உலகைப் போல மெய்யறிவு இல்லாததும், அழிந்து போகக் கூடியதாகவும் இருக்கும். அறியப்படாத பொருளென்றால் அது சூனியமாகவே இருக்கும். அத்துடன் இறைவனை அடைந்து முத்தி பெறுதல்

என்பதும் இல்லாதிருக்கும். கண்ணால் காண முடியாத மனத்தால் அறியப்படுகின்ற பொருளென்று எடுத்தால், திருவருளாகிய சிவஞானத்தால் அடையப்படும் சிவபெருமான் முன்னே சடமாகிய மனம் முதலிய கரணங்கள் வலிமை இழந்து நீங்கும் தன்மை உடையன. ஆதலால் அத்தகைய மனத்தால் அறியப்படும் என்பது பொருந்தாது. எங்கும் வியாபித்திருக்கும் சிவம், கருவி கரணங்களால் அறியப்படாததாய் , எவ்வாற்றலும் அறியப்படாதது அல்லாததாய் சிவஞானத்தால் மட்டும் அறியப்படும் சித்துச் சத்தாய் நிற்கும்.

**நுதலிய பொருள்**-பதி இலக்கணம், நான்காம் ,ஐந்தாம் சூத்திரங்கள் முறையே பசு,பாசங்கட்கு இலக்கணம் கூறின. இச் சூத்திரம் எஞ்சி நின்ற பதிப் பொருளுக்கு இலக்கணம் கூறுகின்றது.

இச் சூத்திரம் இரண்டு அதிகரணங்களை உடையது.

**முதல் அதிகரணம்,** உயிர் அறிவினால் அறியப்பட்டதெல்லாம் அழியும்.

**மேற்கோள்,** ஈண்டு அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது.

இவ் அதிகரணத்தின் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஆறு செய்யுள் இரண்டு பின்வருமாறு கூறுகிறது.

‘‘விடயத்தை வேறுபடுத்தி உணர்ந்தறியும் சுட்டறிவு ,ஒரு பொருள் பற்றி அறிந்து பின் பொருளை அடையும் போது முன்னைய தோற்றம் கெட்டு நிற்பதால் ,அவ்வறிவு தோற்ற நாசமுடையதாகிறது. அதனாலும்,ஒன்றில் நிலைபெறாது வேறொன்றை

நாடுவதாலும் தனு கரண புவன போகங்களைப் பற்றிப் பல்வேறு வகைகளாக அறிவதாலும், மலத்தோடு சேர்ந்திருப்பதாலும், உண்மை ஞானம் வந்தவிடத்தும் ,வேறுபட்டொழிதலாலும், அச் சுட்டறிவு அசத்தேயாம். ஆகையால் அந்தச் சுட்டறிவினால் சுட்டியறியப்பட்டவை அனைத்தும் அசத்தானவை அன்றிச் சத்தானவை அல்ல.

ஆன்மா தனது சுட்டுணர்வால் அறியப்பட்ட சுட்டுப் பொருட்கள் யாவும் அசத்து என வலியுறுத்தி நையாயிகரையும் சாங்கியரையும் மறுத்தது.

**இரண்டாம் அதிகரணம்-** அப் பிரமேமயாக அறியப்பட்டவரே அரன்.

**மேற்கோள்-** இனி இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்கு மனாநீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்று உணரப்பாற்று.

இவ்வதிகரணத்தின் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஆறு, செய்யுள் எட்டுப் பின்வருமாறு கூறுகிறது, “பாவணையான யோகத்தால் இறைவனை அடைய முடியாது. மலம் நீங்கிய ஆன்மாவின் அறிவு தடையின்றி விளங்குமாதலால் அவ்வறிவால் இறைவனை அடையலாமென்பது பொருத்தமானது. அவனருளால் அறிய வேண்டும் என்பது பொருந்தாது என்றால், உயிரறிவால் அறியப்படும் பொருள் உயிரின் வேறாயிருத்தல் வேண்டும் .சிவன் உயிரின் வேறல்லாமையால் ஒன்றாயும்,அறிவிக்கும் பொருட்டு உயிரின் உள்ளறிவாகவும் நிற்பதால் வேறாகவும், அறிந்தவற்றை அனுபவிப்பதற்கு உயிரின் அறிவின் உள்ளாக நின்று செயற்படுவதால் உடனாயும் நிற்கும். இவ்வாறு

உயிரோடு ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் நிற்கும் பரம் பொருளை அறிவாலும் அறிபொருளும் அறிவும் எனப் பகுத்தறிதல் முடியாது. நான் அறிவேன் என்பதால் மலம் நீங்குவதில்லை. அதனால் இறைவன் உயிரறிவால் அறியப்படுவான் என்பது பொருத்தமில்லாதது.

பாசஞானம், பசு ஞானம், பதி ஞானம் என ஞானம் மூன்று வகைப்படும்.

ஆன்மா சொற் பிரபஞ்சம், பொருட் பிரபஞ்சம் என்பவற்றால் அறிந்து கொள்ளும் அறிவு பாசஞானமாகும். இவ் ஞானம், வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், பல்வேறு உலகியற் சாத்திரங்கள், தத்துவ ஆராய்ச்சிகள் என்பவற்றால் ஏற்படும் செயற்கை அறிவு.

மனம்,புத்தி,சித்தம், அகங்காரம் என்ற கருவிகளை உணர்ந்து அவற்றால் இறைவன் எப்படியானவனென அறிய முற்படும் போது நான் என்று முனைப்பால் ஆன்மாவுக்கு உண்டாவது பசு ஞானம் எனப்படும். ஆன்மாவே (நான்) பிரமம் எனக் கூறுவது போன்றது. இது ஆன்மாவின் இயற்கை அறிவு என்று கூறப்படும்.

ஆன்மா இறைவனை (சிவனை) உணர்ந்து, அவனருகில் அடங்கி அவனருளாய் நிற்கும் நிலை பதி ஞானம் எனப்படும். முத்தி நிலையில் ஏற்படும் சிவ அனுபவம் ஏற்படக் காரணமாவது பதி ஞானமாகும்.

ஆன்மா தன்னறிவினால் அறியப்படுவனவெல்லாம் அநித்தியமாவை. தர்க்கம் முதலிய பிரமாணங்களால் மட்டும் இறைவனை அடைய

முடியாது. பதி ஞானத்தால் மட்டுமே இறைவனை அடைய முடியுமென்றும், சிவம் சுட்டுணர்விழந்து அறியப்படுதலின் அது வாக்கு மனதீத கோசரமென்று வலியுறுத்தி மாயாவாதிகள், நையாயியர், பதஞ்சலர், சிவாம வாத சைவர் ,சிவாத்துவித சைவர் ஆகியோரது கருத்தை மறுத்துரைக்கிறது. இக் கருத்தைச் சிவப்பிரகாசத்தின் எண்பத்தியாறாவது செய்யுளம் வலியுறுத்துகிறது.

மேற்ச்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது

1. ஆன்மாவினால் அறியப்படுவனவெல்லாம் அழியும் தன்மை கொண்ட அநித்தியமானவை
2. இறைவன் பதி ஞானத்தால் அறியப்படுபவன்.

# உண்மையதிகாரம்

## 3) சாதனவியல்

### ஏழாம் சூத்திரம்

**யாவையுஞ் சூனியம் சத்தெதிர் ஆகலின்**
**சத்தே அறியா தசத்தில் தறியா(து)**
**இருதிறன் அறிவுள திரண்டலா ஆன்மா.**

சத்தாகிய சிவத்தின் முன்னுள்ளனவெல்லாம் சூனியமாகவே இருக்கும். அதனால் சத்தாகிய சிவம் பிரபஞ்சத்தை அனுபவிப்பதில்லை. பிரபஞ்சம் சடமாக இருப்பதால் சத்தான சிவத்தை அறிய மாட்டாது. சத்தையும் அசத்தையும் பிரித்தறியும் வல்லமை கொண்டது ஆன்மா. ஆன்மா சத்து அசத்து என்னும் இரண்டு தன்மையும் இல்லாத சதசத்தாகும்.

**நுதலிய பொருள்:** சாதித்துப் பலன் பெறுவதற்குரிய அதிகாரமுடையது இது என்பது

இச் சூத்திரம் மூன்று அதிகரணங்களை உடையது.

**முதல் அதிகரணம்**-அரன் பாசத்தை அனுபவியான்.

**மேற்கோள்**-ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென்றது.

வாக்கு மனாதீத கோசரமாய்ச் சுட்டுணர்வின்றி அறியப்படும் சிவத்தின் முன்னர் சுட்டி அறியப்படும் அசத்தாகிய பாசம் விளங்கித் தோன்றாது, ஆதலால், முதல்வன் பாசத்தை அனுபவியான் எனச் சாதித்து சிவாத்துவித சைவரை மறுத்தது.

**இரண்டாம் அதிகரணம்;** பாசம் அரனை அனுபவியாது.

**மேற்கோள்:** இனி அசத்தினுக்கு உணர்வின்று என்றது.

தத்துவப் பிரபஞ்சம் அறிவுடையது போலத் தோன்றினாலும் அறிவில்லாததே ஆகும். பாசம் முதல்வனை அனுபவிக்காது என்பதைச் சாதித்துச் சிவசக்கிராந்தவாதியை மறுத்தது.

**மூன்றாம் அதிகரணம்,**உயிர் அவ்விரண்டினையும் அனுபவிக்கும்.

**மேற்கோள்,** இரு திறன் அறிவுள்ளது இரண்டலலா ஆன்மா என்றது.

இந்த அதிகரணத்தின் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் எழு செய்யுள் இரண்டு பின்வருமாறு கூறுகிறது.

சத்தும் அசத்தும் ஒன்றினை ஒன்று அறிந்து கொள்வதற்கு உரிமை இல்லாததால் ,அவ்விரண்டையும் அறிவது ஆன்மாவேயாம். இவ் ஆன்மா சத்தையும், அசத்தையும் தனித்தனியாக அறியும் ஆன்மா தன்னைத் தனித்து அறிய மாட்டாது. அவ்வாறு அறியப்படாமையால் அது சூனியமும் அன்று. மலரில் உள்ள வாசணை மலர் போல விளங்கித் தோன்றாமலும், சூனியம் அல்லாமலும் அம்மலரின் கண் அடங்கியிருப்பது போல சத்து அசத்து என்ற இரண்டிலும் வேறாகிய ஆன்மாவும், சத்தோடு கூடும் போது சத்தாகியும், அசத்தோடு கூடும் போது அசத்தாயும் இருக்கும். இவ்வாறு ஆன்மா சத்தோடும் அசத்தோடும் கூடிச் சதசத்து என்ற நித்தப் பொருளாய் நிற்கும்.

சதசத்தான ஆன்மா அசத்தை அறியுங் கால் அசத்தின் பாலும், சத்தை அறியுங் கால் சத்தின் பாலும் அதுவதுவாய் மாறி அவ்விரண்டையும் அனுபவிக்கும் அறிவுள்ளது என்று கூறி

சிவசமவாதசைவர் ஈசுவர அவிகாரவாதசைவர், அயிக்கவாத சைவர் ,சிவாத்து விதத் சைவர் சிவ சங்கிராந்த வாதச் சைவர் ,பாடாணவாத சைவர் ,பேத வாத சைவர் ஆகிய இவர்களை மறுத்தது

மேற்சொன்னவற்றால் உணர்த்தப்படுவன

1. இறைவன் பிரபஞ்சத்தை அனுபவிக்கான்.
2. பிரபஞ்சம் இறைவனை அனுபவிக்காது.
3. ஆன்மா இறைவனை அறியும். அனுபவிக்கும்.

## எட்டாம் சூத்திரம்.

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**

**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்**

**டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.**

ஐம்புல வேடர்களுக்குள்ச் சிக்கி துன்பங்களை அடையும் ஆன்மாவை, ஆன்மாவுக்குள் நின்று உணர்த்தும் பரம் பொருள் குருவாகி வந்து முன் செய்த புண்ணிய பலனாய் அறிவிக்க ,ஆன்மா ஐம்புல வேடரை விடுத்து ,முதல்வனான இறைவனின் திருவடியை அடையும்.

இதனைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் எட்டு செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

‘‘அரச குமாரனொருவன் சந்தர்ப்ப வசத்தால் வேடர் கூட்டத்துடன் சேர்ந்து அவ் வேடர்களின் இழி தொழிலைச் செய்து வரும் வேளையில் ,தந்தையாகிய அரசனால் இனங் காணப்பட்டு அரசவைக்குச் சென்று தனது நிலையை உணர்ந்து அரசுரிமையைப் பெறுவதைப் போல,நிலைபெற்ற உயிர் தன் நிலையிலிருந்து வேறுபட்டு, வேடராகிய ஐம்பொறிகளின் வசப்பட்டுத் துன்பப்பட்டுத் தன்னை அறியாமலும், தன் தலைவனை அறியாமலும் இருக்கும் வேளையில் ,அவ்வுயிர் செய்த தவப் பயனால் தலைவனான ஈசன் குரு வடிவங் கொண்டு எழுந்தருளி வந்து, தன்னையும் தலைவனையும் அறியும் வண்ணம்

உணர்த்தி ,ஐம்பொறிகளை விட்டு நீங்குவதற்கான வழிவகையைச் செய்து, மன வலியைக் கொடுத்து, அதிலிருந்து மீட்டு அவ்வுயிரைத் தனது திருவடியின் கீழ் வைத்து வாழ்விப்பான்.''

**நுதலிய பொருள்,**சிறந்த கருவி எனப்படும் சாதனம் இது என்பது.

இச் சூத்திரம் நான்கு அதிகரணங்களைக் கொண்டது.

**முதல் அதிகரணம்,**உயிருக்கு நல்லறிவு தவத்தினாலே வரும்.

**மேற்கோள்,**ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற் செய்த தவத்தால் ஞானம் நிகழும் என்பது.

குரு உணர்த்தியவாறு சிவஞானத்தின் மூலம் ஞான சாதன அறிவுப்படி முறையாக வரும் பல பிறவிகளிற் செய்த சரியை,கிரியை,யோகம் ,ஞானங்களால் அவ்வறிவு வரும் என்பதை வலியுறுத்தி அதை வேறு வேறாகக் கூறும் சமயத்தாரை மறுத்தது.

**இரண்டாம் அதிகரணம்,**உயிருக்கு, சற்குருவாக வருவது அரனே.

**மேற்கோள்,**இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதல்வனே குருவுமாய் உணர்த்தும் என்பது.

மலபரிபாகமும் சந்நிதிபாதமும் நிகழ்ந்து உண்மை ஞானத்தை அடைய விரும்பும் உயிர்கட்கு அதுவரை உள் நின்று உணர்த்தி வந்த முதல்வனான இறைவன், உயிர்களின் பக்குவ நிலையறிந்து

குருவாக எழுந்தருளி சிவஞானத்தை உணர்த்தி ஆட்கொள்ளும் என்பதை வலியுறுத்திச் சாங்கியர், நையாயிகரின் கொள்கைகளை மறுத்தது.

**மூன்றாம் அதிகரணம்,**உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுவதானால் தன்னையும் அறியமாட்டாது.

**மேற்கோள்,**இனி இவ்வான்மாக்கள் மயங்கித் தன்னை உணராவென்றது.

ஆன்மாக்கள் ஐம்பொறிகளின் வசப்பட்டு மயங்கித் தம்மையும் தமக்குத் தலைவனாக இருக்கும் முதல்வனையும் உணராமையால் அதை உணர்த்தத் தமது முதல்வனே குருவாக எழுந்தருள வேண்டும் என்பதனை வலியுறுத்திச் சிவசங்கிராந்த வாத சைவரை மறுத்தது.

இந்த அதிகரணத்தின் கருத்தைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் எட்டு, செய்யுள் முப்பத்தேழு பின்வருமாறு கூறுகிறது.

“ பளிங்கு பல நிறங்களைக் காட்டி நிற்பது அதன் பொது இயல்பு. அது போல ஆன்மாவும் தன்னால் சாரப்பட்ட கருவிகளின் இயல்பு தன்னிடம் விளங்க அதுவாக நிற்கும். இது ஆன்மாவின் பொது இயல்பு. சூரிய ஒளி மூலம் பல நிறங்களைக் காட்டும் பளிங்குக்குச் சிறப்பான ஒளி இருப்பதாக நினைப்பது போல அவ்வியல்பைத் தன்னியல்பு அல்லவென்றும், தன்னியல்பாகிய சிறப்பியல்பு இயல்பின் வேறாய் உண்டென்று அருளாலறிந்து பொது இயல்பான கருவி ஞானம் நீங்கும்படி தன்னியல்பில் உண்மையை உணரும் போது ,அவ்வியல்பால் விளங்கித் தோன்றும்

சிவத்தை ஆன்மா அடையும்.சிவத்தை அடைந்த ஆன்மா தடைப்பட்ட நீர் தடை நீங்கியவிடத்து விரைந்து சென்று கடலை அடைந்து கடல் நீராகிப் பின் மீளாதது போல, ஆன்மாவும் விரைந்து சென்று சிவத்தை விட்டு மீளாது சேர்ந்திருக்கும்''

ஆன்மா ஐம்பொறிகளல்ல. அது வேறானது என்பதால் தான் அது முதல்வனின் திருவடியை அடைகிறது என வலியுறுத்திப் போதவாத சைவரையும் ,சிவாத்துவித சைவரையும் மறுத்தது.

மேற்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது

1. ஆன்மாவுக்கு மெய்யறிவு தவத்தினாலே வரும்.
2. ஆன்மாவிற்குள் சற்குருவாய் வருவது அரனான சிவனே.
3. ஆன்மா ஐம்புலன்களோடு சேர்வதால் தன்னை அறிய மாட்டாது.
4. ஆன்மா ஐம்புலன்களின் பற்றை அறுத்தால் தன்னையும் முதல்வனான சிவத்தையும் அறிந்து கொள்ளும்.

## ஒன்பதாம் சூத்திரம்

**ஊனக் கண் பாச முணராப் பதியை**

**ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி**

**உராத்துனை தேர்ந்தெனப் பாச மொருவத்**

**தண்ணிழ லாம்பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.**

பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் அடைய முடியாத சிவனைத் தன்னறிவின் மூலம் உண்டாகும் அருள் ஞானத்தினால் அறிந்து அடையலாம். பரந்து எங்கும் படிந்திருக்கும் கானல் நீர் போன்றது பாசம் (கானல் நீரை உண்மையென நினைத்துச் செல்லச் செல்ல துாரச் செல்வது போலப் பாசமும் பொய்யானவற்றையே காட்டும்) இதை உணர்ந்து பாசத்தை நீக்கியவர்களுக்கு சிவன் குளிர் நிழலாவான். இந்நிலை நீங்காதிருக்க வேண்டுமானால் முத்தியளிக்கும் திருவைந்தெழுத்தாகிய சிவாயநம என்னும் ஸ்ரீபஞ்சாக்கரத்தை முறைப்படி ஓதுதல் வேண்டும்.

இக் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஒன்பது செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது:

கருவிகளோடு கூடி அறிவதாகிய பாச ஞானத்தாலும், நான் பிரமமென்னும் பசு ஞானத்தாலும் அடைய முடியாத சிவனை அவனது திருவடி ஞானமாகிய பதிஞானத்தின் மூலம் அறிந்து திருவடியில் உறங்கிட

வேண்டும். அவ்வாறு நடவாது பிரபஞ்சத்தை நாடினால் பற்றுக்களுடன் கூடித் துன்பங்களைத் தரும் பிரபஞ்சம் கானல் நீர் போலப் பொய்மையைத் தரும். பாசம் முற்றாக நீங்கிய பின்பு முன்னைய பயிற்சி வசத்தால் பாசம் பற்றித் துன்பம் வராதிருக்கப் பாச நீக்கமும் சிவப் பேறும் தருவதாகிய முத்தி பஞ்சாக்கரத்தை (சிவாயநம) முறைப்படி உச்சரித்தல் வேண்டும். அப்படி உச்சரித்தால் உள்ளத்தின் கண் ஞானத்தை விளங்கித் தன்னைத் தருவான் சிவன்.

**நுதலிய பொருள்:** ,அச் சிறந்த சாதனத்தைச் செய்யுமாறு சொல்வது.

இச் சூத்திரம் ◌மூன்று அதிகரணங்களை உடையது.

**முதல் அதிகரணம்,** உயிர், அரன் ,ஞானத்தினாலே (பதி ஞானம்) அரனைக் காணும்.

**மேற்கோள்-**ஈண்டு அம்முதலை ஞானக் கண்ணாலே காண்க என்றது.

இந்த அதிகரணத்தின் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஒன்பது செய்யுள் நான்கு இவ்வாறு கூறுகிறது. “பொறிகள் வாயிலாகப் பெறப்படும் பாச ஞானம் தானாகச் செயற்படுவதுமில்லை, பிறிதொன்றைச் செயற்படுத்துவதுமில்லை. இதுபோல ஆன்மா தன்னைத் தோல் இரத்தம் முதலியனவோ என ஐயப்பட்டு குற்றங்கள் நீங்கும்படியாகத் தன் சொரூபத்தை உள்ளவாறு அறியாது நிற்கும்.

இந்நிலையில் பாச ஞானம் போலப் பசு ஞானமும் தானாகச் செயற்படுவதுமில்லை.

பிறிதொன்றைச் செயற்படுத்துவதுமில்லை. ஆதலால் பாச ஞானம் பசு ஞானம் என்பவற்றால் பரம சிவனை அறிய முடியாது. இறைவன் திருவடி ஞானமாகிய பதிஞானம் குற்றங்கள் எதுவுமின்றித் தானே பிரகாசித்தும் தன்னையும், ஆன்மாவையும் அவ்வான்மாவிற்குப் பிரகாசப்படுத்தி நின்று எல்லாப் பொருட்களையும் நன்கு விளக்கும். அத்தகைய பதி ஞானமே பதிப் பொருளை அடைய வைக்கும்.

முதல்வன் வாக்கு மனாதீத கோசரமாதலின் அவனைச் சிவஞானத்தாலே உணர வேண்டும் என வலியுறுத்திச் சிவசமய வாத சைவரை மறுத்தது.

**இரண்டாம் அதிகரணம்** ,உயிர் பாசத்திலே பற்று அற்றால் அரன் வெளிப்படுவான்.

**மேற்கோள்,**இனி அசத்தாயுள்ள வகை பேதங்களை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞான சொரூகம் என்று உணரப்பாற்று.

என்றும் நிலையான ஞான சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிற்கும் நிலையில்லாத காரியப் பிரபஞ்சத்தின் தன்மையை விவேகத்தினால் அறியின், அப்போது சிவஞான சொரூபம் சோதிக்குச் சோதியாய்த் தோன்றும் என வலியுறுத்தி மாயாவாதியை மறுத்தது.

**மூன்றாம் அதிகரணம்** பஞ்சாக்கர மந்திரம் ஓதினால் வாசனா மலம் (ஆணவம்) போகும்.

**மேற்கோள்-**இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது.

இந்த அதிகரணத்தின் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் ஒன்பது செய்யுள் எட்டு பின்வருமாறு கூறுகிறது. “ஐந்தெழுத்தை முறைப்படி ஓதினால் ஆன்மா சிவனை அடையும். இது நடைபெற வேண்டுமாயின் அவனின் திருமேனி ஐந்தெழுத்தாலானது என உணர்ந்து, ஐந்தெழுத்தை ஓதியபடி சகல கருமங்களையும் செய்து கொண்டு, இருதயத்தில் அரனை நிறுத்தி, ஐந்தெழுத்தால் பூசித்துக் கொண்டு உந்தியில் அவ் ஐந்தெழுத்தால் ஓமஞ் செய்து, உள்ளத்தையும், உடலையும் அடக்கி ,ஆசையகற்றி ,மனதை ஒருமுகப்படுத்தி , மனம் இந்திரியங்களை அடக்கி , உறுதியாக இருந்து சிவனின் திருமேனியைத் தியானித்து , அவன் அருள் வழியாக நின்று ஐந்தெழுத்தை உணர்வுபூர்வமாக உச்சரித்தல் வேண்டும். ஐந்தெழுத்து மந்திரமும், அகத்தே செய்யும் பூசை ஓமம் தியானம் என்னும் கிரியையும் மனக்குழப்பமின்றி இருந்து கொண்டு செய்தல் வேண்டும். இப்படிச் செய்தால் பதியாகிய சிவன் ஆன்மாவிற்குக் காட்சி கொடுப்பான்.

சிவப்பிரகாசம் என்ற நூலின் செய்யுள் எழுபத்தெட்டு இவ்வாறு கூறுகிறது: பாசம் நீங்கிய ஆன்மா பழக்க தோசத்தால் , பஞ்சேந்திரியங்களின் வழியில் செல்லாமல் இருப்பதற்கு ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி ஓதுதல் வேண்டும் என்று கூறிச் சீவன் முத்தர்கள் செய்ய வேண்டியவை எதுவுமில்லை என்பதை மறுத்தது.

மேற்ச்சொன்னவற்றால் உணர்த்தப்படுவது-

1. ஆன்மா பதிஞானத்தினால் இறைவனைக் காணும்.

2. ஆன்மா பாசத்திலே பற்றறுத்தால் இறைவன் வெளிப்படுவான்.
3. பஞ்சாக்கர செபம் பண்ணினால் வாசனா மலம் போகும்.

## 4. பயனியல்

## பத்தாம் சூத்திரம்

**அவனே தானே யாகிய வந்நெறி**

**ஏக னாகி யிறைபணி நிற்க**

**மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.**

ஆன்மா முத்தி நிலையில் இறைவனோடு ஒன்றித்துத் தானென வேறுபாடு காணப்படாது இறைவனேயாகும்படி ஒற்றுமைப்பட்டு ஏகனாகி நிற்கும். மல நீக்கம் பெற்ற ஆன்மா செய்யும் எல்லா வினைகளையும் இறைவன் தான் செய்யும் வினைகளாக ஏற்றுக் கொள்வான். இதனால் ஆகாமிய வினையும் ஆன்மாவைச் சாராது .ஆன்மாவுக்குப் பழைய வாசனையில் வந்து தாக்கும் மும்மலங்களின் மயக்க உணர்வும் தோன்றாது.

இக் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் பத்து, செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

‘‘பதி ஞானத்தால் காணப்படும் இறைவன் பெத்த நிலையில் உடனாய் நிற்பினும் வேறுபாடு காணப்படாது ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழி நிற்பான். இந்நிலையில் யான் எனது எனும் செருக்கு இல்லாமற் போகும். இந்நிலையில் இறைவன் ஆன்மாவின் செயல்களைத் தன் செயலாக ஏற்றுக கொள்வான். ஆன்மா இந்நிலையில் அரன் வசப்பட்டு நிற்றலால் இந்திரியங்களின் செயற்பாடுகள் அற்றுப்

போய் விடும். இதனால் வினையும், வினைப்பயனின் அனுபவமும் ஆன்மாவைப் பந்தப்படுத்தாது, இதனால் ஆகாமிய வினைப்பயனால் உண்டாகும் பிராரத்துவமும் இல்லாது போகும். அவ்விரு வினைகளும் ஒழிவதால் சஞ்சித வினையும் ,மாயையும் ஆணவமுமாகிய குற்றங்கள் மூன்றும் ஆன்மாவைப் பாதிக்காது ஒழியும்''

**நுதலிய பொருள்** ,துன்ப நீக்கமாகிய பெத்த நீக்கப் பயனைக் கூறுவது.

இச் சூத்திரம் இரண்டு அதிகரணங்களை உடையது.

**முதல் அதிகரணம்-**அரனுடன் ஒன்றாகி நிற்றல்.

**மேற்கோள்,**பரமேஸ்வரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான அரனிடத்து ஏகனாகி நிற்க என்றது.

பரமேஸ்வரன் அவ் ஆன்மாவாய் நின்ற முறைமையால் அவனோடு ஒற்றுமைப்பட்டு ஏகனாகி நிற்க யான் எனது என்னும் செருக்கறுந்து சிவஞானத்தைப் பெறுமென வலியுறுத்திச் சிவசமயவாத சைவரை மறுத்துப் பாச நீக்கத்தைச் சாதித்தது.

**இரண்டாம் அதிகரணம்:** உன் தொழில் எல்லாம் அரன் பணியென்றே கொள் என்றது.

**மேற்கோள்,** இனி இறைபணி வழுவாது நிற்க என்றது.

இவ் அதிகரணத்தின் கருத்தைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் பத்து செய்யுள் மூன்று பின்வருமாறு கூறுகிறது: ‘‘அரசனது ஆணைப்படி தண்டனை வழங்குவது அதிகாரியின் கடமை. அரசனின் ஆணையின்றி அவர் அப்படிச் செய்ய முடியாது.அரசனின் அன்பைப் பெற்றவன் தண்டிக்கும் வல்லமை பெறுவான். இதுபோல இறைவனின் அருளைப் பெற்றவன் இந்திரியங்களை அடக்கும் வல்லமையைப் பெறுவான். அத்தன்மையைப் பெற்றவிடத்தும், பயிற்சி காரணமாக அவ் இந்திரியங்களில் குறும்பு நிகழுமாயின் அது இந்திரியங்களையும் என்னையும் கூட்டுவித்த இறைவனின் செயலென்று எண்ணித் தொடர்ந்து இறைபணியில் நிற்றல் வேண்டும். அவ்வாறு நிற்பின் அவ்விந்திரியங்கள் மூலம் பிறந்து பந்தப்படுத்தக் கூடிய வினைகள் பந்திக்க மாட்டாதவையாய் மடங்கி அழியும். இவ்வாறு செயற்படுபவன் மீண்டும் இந்திரியங்களின் வழிப்பட மாட்டான்..’’

இறைபணி நிற்றல் என்பது எவ்வாறென்று சிவஞானசித்தியாரின் சூத்திரம் பத்து, செய்யுள் நான்கு பின்வருமாறு கூறுகிறது.

‘‘இறைவனோடு சேர்ந்த நிலையில் ஆன்மா ஏகனாக நிற்கும் .அது சில சமயம் நீங்கினால் எல்லாம் அவன் செயல் .எல்லாவற்றையும் நீயே

செய்கிறாய். எனக்குப் பிறர் செய்யும் செயல்களையும் நீயே செய்விக்கிறாய் என்ற நினைவோடு சிவத்திடம் தம்மை ஒப்படைத்துச் செயலாற்றல் வேண்டும். இதுவே இறைபணியாகும். பணி என்பது செயல் இறைபணி என்பது அனைத்துச் செயல்களையும் இறைவனுக்காக இறை நினைவுடன் செய்தல் ,இந்நிலையில் தான் செய்தேன் ,பிறர் செய்தார் என நினைப்பதாகிய அஞ்ஞானமும், புண்ணிய பாவங்களாய் வந்து சேரும்''

இவ்வாறு இறைபணி செய்வோரைச் சிவபெருமான் தன்னைப் போலச் சுத்தம் செய்து, பாதுகாப்பார். இந்நிலையில் ஒழிந்து கிடந்த ஆகாமிய வினை அவருக்கு நன்மை தீமைகளைப் பிறர் செய்தவிடத்து அவருடைய நன்மை தீமைகளுக்குத் துணையாகச் சென்று சேருமாகையால் ,அவ்வாறு கூடும்படி செய்து பிறர் செய்த அவற்றின் பலன்களை நல்வழிப்படுத்தி அவரோடு சேர்த்து வைப்பன. இவ்வாறு முத்தர் செய்த வினையை அவருக்கு இறைபணியாக்கியும், பிறர் செய்த வினையை அவருக்கு வினையாக்கியும் செய்தல் இறைவனின் பணியல்ல என்று சொல்ல முடியாது. ஏனெனில் முத்தன் தன்னையே சார்ந்து நிற்றலினாலும், ஏனையோர் அங்ஙனம் சாராது நிற்றலினாலும் அவரவரின் தகுதியறிந்து செய்யப்படுவதால் அது இறைவனது பணியாகவே கொள்ளப்படும்.

சிவனின் திருவருளைப் பெற்ற ஆன்மா உடம்பு நீங்கும் வரை செய்வனவெல்லாம் சிவனிட்ட செயலென்று கலங்காது செய்யும் போது மயக்கம் வந்து அதைத் தாக்காது என வலியுறுத்திச் சுத்த சைவர் முதலியோரை மறுத்து மலங்கள் நீங்குமெனச் சாதித்தது.

மேற்கூறியவற்றால் பெறப்படுவன.

1. ஆன்மா அரனுடன் ஒன்றாகி நிற்கும்.
2. ஆன்மா தன்தொழிலெல்லாம் அரன் பணியெனக் கொள்ளல் வேண்டும்.

## பதினொராம் சூத்திரம்

**காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்**

**காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்**

**அயரா அன்பின் அரன்கழல் செலுமே.**

காட்சியையுடைய கண்ணுக்கு உருவத்தைக் காட்டித் தானும் காண்கின்ற ஆன்மாவைப் போல, உருவத்தைக் காணுமாறு அந்த ஆன்மாவுக்குச் சிவன் காட்டியும் கண்டும் நிற்பான். அத்தகைய சிவனை மாறாக அன்பினால் ஆன்மா கூடும்.

கண் புறத்தே உள்ள எதையும் தானே காணமாட்டாது. ஆன்மா, கண் புறத்தே உள்ளவற்றைக் காண்பதற்காக அதோடு சேர்ந்து நின்று காட்டுவதோடு தானும் அதைக் காண்கிறது. அதுபோல இறைவனும் ஆன்மாவோடு ஒருங்கிணைந்து நின்று விடயங்களைக் காட்டுவதோடு தானும் ஆன்மாவின் சிற்சக்தியோடு இணைந்து செயற்பட்டுக் காணுதலும் செய்கிறான்.

இக் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் பதினொன்று செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

“காட்டக் காணும் தன்மையுடைய கண்ணுக்கு உருவத்தைக் காட்டிப் பின் அதை உணர்த்தி, கண்ணோடு சேர்ந்திருந்து அவ் உருவத்தைக் காணும் ஆன்மாவுடன் கூட நின்று ஆன்மாவைச் செயற்படுத்தி வருகிறான். இதனால் உடல் அழிந்த பின்னர் மும் மலங்களும் நீங்கியமையால் சுத்தமாக்கப்பட்ட ஆன்மா, முதல்வன் அத்துவிதமாக நின்று அறிவித்தும் அறிந்தும் வருகின்ற தன்மையை அறிந்து அதன்படி

நிற்கும். இந்நிலையில் ஆன்மாவுக்கு முதல்வனை அடைய வேண்டும் என்ற விருப்பம் தோன்றும். இவ்விருப்ப மேலீட்டால் இறைவனின் திருவடியை அடைய ஆன்மா செய்யும் இடையறாத செயல்களால் இறையடியை அடையும். உடல் நீங்காது சுத்தனாய் நிற்கும் தன்மையைப் பெற்ற ஆன்மா உடல் நீங்கப் பெற்ற ஆன்மா இறைவனை அடையச் செய்த செயல்களை இடையறாது செய்தால் உடலோடு அந்நிலை கை கூடப் பெறும்.

**நுதலிய பொருள்,**மாறாத இன்பப் பேற்றையடையப் பெறும் முத்திப் பயனைக் கூறுவது.

இச் சூத்திரம் இரண்டு அதிகரணங்களை உடையது.

**முதல் அதிகரணம்,** ஞானிக்கு வருகின்ற விடயங்களை அரனே அறிவிப்பான்.

**மேற்கோள்,**ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது.

ஆன்மா ஒன்றினை உணரும் போது முதல்வனும் அவ்விடயங்களை உடன் நின்று உணர்வான் என்று கூறி ஈஸ்வர அவிகாரவாதி சிவாத்துவ சைவர் ஆகிய இவர்களை மறுத்துப் பிரார்த்த வினைத் தொடர்பாகிய வாசனை நீக்கத்தை நிலைநிறுத்தும் சுத்தாத்துவித நிலையை வலியுறுத்தியது.

**இரண்டாம் அதிகரணம்:**அரனை மறவாது அன்பு கொண்டால் அவ்வரனோடு ஐக்கியமாய்ப் போவான்.

**மேற்கோள்,**இனி பக்தியினால் மறவாது துதிக்க அவனது திருவடியை அடையும் என்றது.

ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகள் யாவும் அருள் வழி நின்றாலன்றிச் சிவபோக வாழ்வு கிட்டாது என்பதை வலியுறுத்தி, இதற்கு மாறாகக் கூறும் சமயத்தாரை மறுத்துச் சிவபேற்றைச் சாதித்தது.

## பன்னிரண்டாம் சூத்திரம்

**செம்மலர் தோன்றாள் சேர லொட்டா**

**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**

**மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**

**ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.**

சிவந்த மலர் போன்ற மென்மையான பாதங்களையுடைய சிவபெருமானது திருவடியைத் தொழுதடைந்த சீவன் முத்தன், வலிமையான மூன்று மலங்களிலிருந்தும் நீங்கிய சிவ பக்தர்களைச் சிவமென நினைத்து அவர்களுடன் கூடிச் சிவபிரானிடத்து அன்பு மிகுந்துள்ளவர்களின் திருவேடத்தையும் ,சிவாலயங்களையும் சிவமெனக் கண்டு வழிபடுவான்.

இச் சூத்திரத்தின் கருத்தைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் பன்னிரண்டு செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகிறது. “சிவப்பேறு எய்திய முத்தர்கள் கன்மம் செய்யும் சரீரம் உள்ளவரை இறைவனது செந்தாமரை போன்ற திருவடிகளைப் பற்றி நிற்பதோடு, நிட்டையில் இருந்தும் ,சிவனின் பெருமைகளைச் சொல்லியும், கேட்டும், நினைத்தும் ஆனந்தப்படல் ,சிவனடியார்களையும் அவர்களது திருவேடத்தையும் மதித்துச் சிவனெனப் போற்றி வழிபடல் ,சிவாலயங்களுக்குச் சென்று தொண்டுகள் செய்தல், வழிபடல் ,ஆனந்தக் கூத்தாடல் என்பவற்றைச் செய்தல் வேண்டும்.

**நுதலிய பொருள் .**பெத்த நீக்கமும் முத்தியும் பெற்ற ஆன்மாவுக்குச் சிவன் முத்தி நிலையில் நிகழ்த்தும் நிகழ்வு.

இச் சூத்திரம் நான்கு அதிகரணங்களை உடையது.

**முதல் அதிகரணம்:**மும்மலங்களையும் களைதல்

**மேற்கோள்:**ஈண்டு ஆணவம் மாயை கன்மம் என்னும் மலங்களைக் களைக என்றது.

சீவன் முத்தர்களுக்கு உடம்புள்ள வரை பிரார்த்த வினை அவர்களின் உடம்பைப் பற்றி நிற்கும். இவ்வாறு பற்றி நிற்கும் பிரார்த்த வினை சீவன் முத்தர்கள் கன்மமாற்றும் போது ஏதோ ஒரு வழியால் அவர்களைத் தாக்கி அவர்களின் மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்தும். ஆகையால் ஞான நிலையில் உறைந்திருந்து அம் மும்மலங்களையும் களைக என்றது.

**இரண்டாம் அதிகரணம்:**சிவஞானிகளுடன் கூடுக என்றது.

**மேற்கோள்:**இனி சிவபக்தர்களுடன் இணங்குக என்றது.

இந்த அதிகரணத்தின் கருத்தைச் சிவஞான சித்தியாரின் சூத்திரம் பன்னிரண்டு செய்யுள் இரண்டு பின்வருமாறு கூறுகிறது.

“காமம் கொண்ட ஒருவன் ஒரு பெண்ணிடத்து அன்பு கொள்வானேயானால், அப் பெண்ணின் இனத்தவரின் மீதும் அன்பு கொள்வான், அது போல

ஈசனுக்கு அன்புடையவனாகில், அவ் அன்புடைமை அவனைத் தொழும் அடியார்களிடத்தும் ஏற்படும். ஆதலால் அடியார்களிடத்து அன்பில்லாதவர்கள் ஈசனிடத்தும் அன்பில்லாதவர்களேயாவர். அன்றியும் ஈசன் எல்லா உயிர்களிடத்திலும் உள்ளான். அதனால் ஈசனில் அன்புடையோர் எல்லா உயிர்கள் மீதும் அன்புடையவராக இருப்பர். இவ்வாறு ஈசனிடத்தும், அவரின் அடியார்களிடத்தும் மற்றும் உயிர்களிடத்தும் அன்பில்லாதவர்கள் தம்முயிருக்கும், தம் இன்பத்திற்கும், கேடு செய்பவர்களாவார். காமம் மிகுதியாக உடையவனுக்குத் தன்னோடு தொடர்புடையவளின் சுற்றத்தாரது இணக்கம் அவனது காமப் பயிரை வளர்க்கும் நீராகிப் பின் அவ் விணக்கத்தால் மிகுந்த இன்பம் உண்டாவது போல, ஈசன் மீது அன்பு கொண்டவன் ஈசனது அடியாரைக் கண்டதும் உவகை கொள்வான். காமுறுபவன், காமுறுபவளின் சுற்றத்தவர்களல்லாதவர்களைக் காமப் பயிரைக் கெடுக்கும் களை என்று நினைப்பதைப் போலச் சிவபக்தர்கள் சிவபக்தரல்லாதவர்களோடு சேர்ந்தால் பிறப்பு இறப்பு ஆகிய துன்பங்களைத் தொடர்ந்து பெற்றுத் துன்பப்படுவார். அடியார்களைக் கும்பிட்டு ,அவர்களைச் சிவனென நினைத்துப் போற்றிப் புகழ்ந்து கைகொட்டிக் கூத்தும் ஆடித் திரிவாயாக'

அஞ்ஞானத்தை உணர்த்தும் சிவனடியார்கள் அல்லாதவர்களுடன் சேராமல் நிச அனுபவம் நீடித்து நிலை பெறுவதற் பொருட்டுச் சீவன் முத்தர்களாகிய சிவ பக்தர்களோடு இணங்குக என்று வலியுறுத்துகிறது.

**மூன்றாம் அதிகரணம்,** சிவஞானிகளையும், சிவலிங்கத்தையும் சிவனென நினைத்து வழிபடுக

**மேற்கோள்:** இனிச் சிவனடியார்களது திருவேடத்தையும் ,சிவாலயத்தையும் சிவனென நினைத்த வழிபடுக என்றது.

இவ் அதிகரணத்தின் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் பண்ணிரண்டு செய்யுள் மூன்று பின்வருமாறு கூறுகிறது.

‘‘சீவன் முத்தர்கள் அறிவில்லாதவர்களின் இணக்கத்தை விடுத்தற் பொருட்டு யாது செய்தல் வேண்டுமெனின் ,சிவனடியார்களைச் சிவனென நினைத்து வழிபடல் வேண்டும். சிவன் உலகத்திலுள்ளவர்கள் ஈடேறும் பொருட்டுத் திருநீறு, உருத்திராக்கம், தன் திருவேடம் ஆகியவற்றைச் சிவனடியார்களுக்குக் கொடுத்து அவ்வடியாரின் உயிரோடு கலந்து நின்று அவ் அடியாரின் அறிவினைப் பெருக்கி, அருளினால் கலந்திருப்பதால் அவ் வேடமுள்ள மெய்யன்பர் சிவமேயாவார். சிவோகம் பாவணையாலும் அவர் சிவமேயாவார். இதயத்தில் ஒரு நோக்கை வைத்து முதல்வனை வணங்கும் செயலாலும் அவர் சிவமேயாவார். அவ்வாறு வணங்குங் காலத்தில் குறியும் குறிக்கின்ற தாமும் இன்றி நின்ற தன்மையாலும் சிவமேயாவார்.

இதே கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் பன்னிரண்டு செய்யுள் ஏழு, பின்வருமாறு கூறுகிறது.

‘‘சொரூப சிவமும், தடத்த சிவமும் ,சிவலிங்காதி மூர்த்தங்களும், சிவபக்தர்களுக்காக அவ்வப்போது சிவனால் எடுக்கப்படும் மூர்த்தங்களும் பரஞானத்தை

உடையாகும் ஆகிய எல்லாம் சிவனென எண்ணி ஞானகுருவை வழிபடுக. அவ்வாறு வழிபட்டால் சிவபெருமான் அக் குருவாகி வெளிப்படுவார். கோழி தன் முட்டைகளை பரீட்சித்துக் காத்துக் குஞ்சாக்குவது போல, குரு சீடனின் சிரசில் கைவைத்தலாகிய பரிச தீட்சை செய்தும், ஆமையானது தனது முட்டையைக் கருதிச் சிசு உற்பத்தி செய்வது போல, சித் சித்தித்தலாகிய பாவனை தீட்சை செய்தும், மீனானது பார்வையினால் மீன் உற்பத்தி செய்வது போல பார்த்தலாகிய சட்சுதீட்சை செய்தும், சிவமாகச் செய்தருள்வான்.

இந்த அதிகரணத்தின் கருத்தைச் சிவஞானசித்தியாரின் சூத்திரம் பன்னிரண்டு ,செய்யுள் நான்கு பின்வருமாறு கூறுகிறது.

‘‘சிவனடியார்களைச் சிவமாகக் கருதி வழிபடுவது போலச் சிவாலயங்களையும் ,சிவமாகக் கருதி வழிபடல் வேண்டும் .சிவ வழிபாடு நான்கு வகைப்படும். அவை வருமாறு ,சிவாலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சிவமெனக் கண்டு வழிபடுவது சரியை வழிபாடு. சரியை வழிபாட்டாளர்களுக்கு சிவபெருமான் அத்திருமேனிகளில் வெளிப்படாது நின்று அருள் செய்வான்.

அருவப் பெருளாகிய சிவபெருமான் சிவலிங்கத்தில் திருவுருக் கொண்டிருக்கிறான் எனக் கருதி மந்திரக் கிரியைகளால் வழிபடுபவர்கள் கிரியையானர். இவர்களுக்கு விறகைக் கடைந்தவிடத்து தோன்றும் தீயைப் போலச் சிவபெருமான் சிவலிங்கத்தில் வெளிப்பட்டுத் தோன்றி அருள்புரிவார்.

உள்ளத்தைக் கோவிலாகக் கொண்டு வாழும் சிவபெருமான் தம் திருமேனியிலும் இருந்தருளுவான்

எனக் கருதிச் சக்தி சம்பந்தமான மந்திரங்களால் சிவலிங்கம் முதலிய திருமேனிகளை வழிபடுபவர்கள் யோகிகள். இவர்களுக்குச் சிவபெருமான் கறந்தவிடத்துத் தோன்றும் பால் போல இலகுவில் வெளிப்பட்டுத் தோன்றி அருளுவான்.

ஞானிகள், ஏகதேசமாய் வழிபடாது ,நீங்காத அன்பினால் சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சிவமெனக் கண்டு வழிபடுவார்கள். இவர்களுக்கு பசுவின் உடல் எங்கும் காணப்படும் பால் கன்றை நினைத்தவுடன் அதன் முலையில் இருந்து ஒழுகுவது போல அன்பு மிகுதியால் சிவபெருமான் எப்போதும் அத்திருமேனிகளில் வெளிப்பட்டு நின்று அருள் புரிவான். ஆகையால், அவ்வுண்மையை உணர்ந்து அன்பால் சிவனை வழிபடுக என்றது.

சரியையாளர் முதலிய நால்வரும் சிவபெருமான் மீது அன்பு கொண்டிருப்பினும் இடைவிடாது அன்பைச் செலுத்துபவர்கள் ஞானிகளாவார். இதனால் ஞானிகளே அன்பர்கள் எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறார்கள்.

சிவனடியார்களின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவபெருமான் என நினைத்து வழிபடல் வேண்டும்.

**நான்காம் அதிகரணம்,**வழிபடாமையை ஒழிக

**மேற்கோள்,**இனி இவ்விடங்களில் வழிபடுக என்றது.

நான்காம் அதிகரணம் பிராரத்த வினையைப் பற்றறக் கழிதற் பொருட்டும், முதல்வனான சிவன் தானாக உவந்தளித்த சிவப்பேற்றின் நன்றிறை மறவாதிருத்தற் பொருட்டும் சிவாலயங்களையும், திருவேடத்தையும் வழிபடுமாறு வலியுறுத்திக் கூறுகிறது.

*சிவஞானபோத உரை முற்றிற்று*